Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 225 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை
(07.05.2025) ஹிஜ்ரி 1446, துல்கஃதா - 08, 0115 886187- விலை ரூ.50 பக்கங்கள் 12

## இன்று இலங்கை வருகிறார் உலக வங்கித் தலைவர்



» 02பக்கம்












2025 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நாடு முழுவதும் நேற்று (06) இடம்பெற்ற நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மருதானையிலும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ராஜகிரியவிலும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு கொலேஜ் ஹவுஸிலும் சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர நுகேகொடையிலும் வாக்களித்தனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் அமைதியாக நிறைவு!



(படப்பிடிப்பு – லலித் பெரேரா)

## 52 முதல் 70 சதவீதம் வரையான வாக்குப்பதிவு; ஆளுங்கட்சிக்கு எதிர்பார்த்த பெரும்பான்மை இல்லை

» 02 பக்கம்

## பல்கலை மாணவன் மீதான பகிடிவதை

### சந்தேகநபர்கள் 10 பேர் கைது

### 11 மாணவர்களுக்கு வகுப்புத்தடை



» 02பக்கம்

## வெற்றிகரமான தேர்தல் முடிவுகள் வெளியாகும்

### ஜனாதிபதி அநுர நம்பிக்கை



ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் மக்கள் பின்பற்றிய ஜனநாயக ரீதியான பண்புகளை, இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலும் பின்பற்றுவார்கள் என்று நம்புவதாகவும் வெற்றிகரமான தேர்தல் முடிவுகள் வெளியாகுமென எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மருதானை, பஞ்சிகாவத்தையில் உள்ள அபேசிங்காராம சய்கொஜி முன்பள்ளியில் நேற்று (06) பிற்பகல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு... » 02 பக்கம்

## கொட்டாஞ்சேனை மாணவி விவகாரத்தில் தலையிட்டது மகளிர் அலுவல்கள் அமைச்சு

### சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கல்வி அமைச்சினூடாக அடுத்தகட்ட நடவடிக்கை

கொட்டாஞ்சேனை மாணவி தற்கொலை விவகாரத்தில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார பொலிஸ் அலுவலகத்துடன் இணைந்து மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் கல்வி அமைச்சின் அடுத்தகட்ட செயற்பாடுகள் தொடர்பில் தீவிர கவனம் செலுத்தியுள்ளதாகவும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் மாணவியின் பெற்றோரிடம் நேற்று... » 02 பக்கம்




## கமெண்ட் கந்தர்...



இனி அடுத்த எலெக்சன் வரும்வரைக்கும் சுவாரஸ்யமான கற்பனை கதைகளையெல்லாம் கேட்க முடியாது என்னங்கோ...?

## உஷ்



***வியட்நாமுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விசேட ஜெட் விமானம் மூலம் நேற்று நாடு திரும்பியிருந்தார்.***

***அதிசொகுசு ஜெட் விமானமான Embraer Legacy 600 மூலம் ஜனாதிபதி பயணித்தது என்ன அடிப்படையில்? அதற்கு செலவளித்தது யார் என்று நெட்டிசன்கள் கேள்விகளை எழுப்பி விமர்சித்திருந்தனர்.***

***எவ்வாறாயினும் தேர்தல் வாக்களிப்புக்கு வரவேண்டி இருந்ததால் ஜனாதிபதிக்கான இந்த விமானத்தை வியட்நாம் அரசே ஒழுங்குபடுத்தி அனுப்பியதாக இப்போது தகவல் வெளியாகியுள்ளது. ஜனாதிபதி எவரின் நிதியைப் பெற்றோ அல்லது அரச பணத்தை செலவிட்டோ இந்த விமானத்தை பயன்படுத்தவில்லை என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.***



## போர் மூளும் அபாயம்!

### இந்தியா முழுவதும் இன்று 259 இடங்களில் போர் ஒத்திகை

» 10 பக்கம்



# ஜனாதிபதிக்கு எதிராக பொய்யான அறிக்கை; புகார் குறித்து சி.ஐ.டி. விசாரணை

சமூக ஊடகங்களில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கிடைத்த முறைப்பாட்டை தொடர்ந்து அதுதொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளைத் ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, குறித்த கருத்து பொது ஒழுங்கு மற்றும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ளதால், அதிலுள்ள உண்மைகளின் மூலங்களை வெளிக்கொணரும் வகையில், ஊடகங்கள் மூலம் மேற்படி கருத்து வெளியிட்ட துசித ஹலோலுவா, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 109(6) இன் கீழ் இன்று (07) காலை 10.00 மணிக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், அவரது வழக்கறிஞர் அகலங்க உக்வத்தே, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு எதிராக அவதூறான மற்றும் தவறான அறிக்கை தொடர்பாக கடந்த 04 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மக்கள் எடுக்கும் முடிவுக்கு சகலரும் மதிப்பளிக்க வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



கிராமங்களினதும் நகரங்களினதும் அதிகாரத்தை யாருக்கு வழங்குவது என்பதை தீர்மானிக்க இந்நாட்டு மக்களுக்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. மக்கள் இதனை சரியாக பயன்படுத்துவார்கள் என நான் நம்புகிறேன். ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்ற பிறகு, கிராமங்களைக் கட்டியெழுப்பி, நகரங்களைக் கட்டியெழுப்பி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2025 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்றுக் காலை ஆரம்பமானது. எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவருமான சஜித் பிரேமதாச நேற்று (06) காலை ராஜகிரிய, கொடுவேகொட விவேகாராம விகாரை, சந்திரலோக தஹம் பாடசாலை கட்டிடத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கைப் பதிவு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசியல் செய்தியை சரியான நேரத்தில் மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளோம். தீர்மானம் எடுக்க வேண்டியது மக்களே.

அந்நிலையில் மக்கள் எடுக்கும் முடிவுக்கு சகலரும் மதிப்பளிக்க வேண்டும். தேர்தல் சட்டங்களை மீறாமல் நடந்து கொள்ள வேண்டும். இந்த ஜனநாயகத்தை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும் என்றார்.

## ஊழல் - மோசடி இல்லாத பிரதிநிதிகள் தெரிவாவர்

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு






நாட்டு மக்கள் உள்ளூராட்சி மன்றங்களிலும் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த, ஊழல் மற்றும் மோசடி இல்லாத, தங்களின் சமூகங்களின் வளர்ச்சிக்கான உண்மையான அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய தனிநபர்களைக் கொண்டுள்ளார்கள் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கோட்டை, மிரிஹானவிலுள்ள சமுர்த்தி கட்டிடத்தில் நடைபெற்ற வாக்களிப்பு நிலையத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், கடந்த ஆண்டு, இந்த நாட்டு மக்கள் இரண்டு வரலாற்று முக்கியத்துவமிக்க அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டனர். இந்த முறையும் அவர்கள் தங்கள் உள்ளூர் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது இதேபோன்ற முடிவை எடுப்பர் என்று நான் நம்புகிறேன். இந்த நாட்டு மக்கள் இப்போது உள்ளூராட்சி மன்றங்களிலும் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஊழல் மற்றும் மோசடி இல்லாத, தங்களின் சமூகங்களின் வளர்ச்சிக்கான உண்மையான அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய தனிநபர்களைக் கொண்டுள்ளனர் என்பது எனது நம்பிக்கையாகும் என்றார்.

## பொலிஸாரை தாக்க முயன்ற நபரொருவர்மீது துப்பாக்கிச்சூடு

### காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்ப்பு

சீதுவ பகுதியில் குழப்பத்தை விளைவிக்கும் வகையில் செயற்பட்ட நபர் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

குறித்த நபர் பொலிஸ் உத்தியோகத்தரை கூரிய ஆயுதத்தால் தாக்க முற்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இதன்போது சந்தேகநபரை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச் சாளர் தெரிவித்தார்.








கொழும்பின் பல பிரதேசங்களிலும் மக்கள் நேற்று (06) ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு – லலித் பெரேரா)

## இந்தியா செல்கிறார் ரணில்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை (08) இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயம் இருநாள் விஜயமாக அமையுமென ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நான்காவது முறையாக இந்தியாவுக்கு பயணிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஹிந்து பத்திரிகையினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் பிரகாரம் இந்தியாவின் கர்நாடகா மாநிலம், பெங்களூருவில் இடம்பெறும் நிகழ்வில் பிரதான உரையாற்றுவதற்காக அழைப்புக் கிடைத்துள்ளது.

கர்நாடகா மாநிலத்தின் முதலமைச்சர் சிறி சித்ராமணி பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார். இருநாள் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் அரசியல், வர்த்தக, சாஸ்திர, விளையாட்டு மற்றும் கலை துறையிலுள்ள முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

## வாகன முறைகேட்டை விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழு

கலால் திணைக்களத்துக்குள் வாகன முறைகேடு வழக்கை விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. கலால் திணைக்களத்தின் சொத்து என்று கூறப்படும் வாகனத்தை தவறாகப் பயன்படுத்தியவர்கள் மீது மேலும் நடவடிக்கை எடுக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்க கலால் திணைக்கள ஆணையர் நாயகம் யூ.எல். உதய குமார உத்தரவிட்டுள்ளார்.

### பல்கலை மாணவன்...

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டு தொழில்நுட்ப பீடத்தில் கல்வி கற்ற மாணவனை பகிடிவதை செய்தது தொடர்பில் மேலும் மாணவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களை பலங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அதற்கமைய, இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 10 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும், பகிடிவதையின் காரணமாக மாணவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைதுசெய்யப்பட்ட மூன்றாம் ஆண்டில் கல்வி கற்கும் 04 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேருக்கு வகுப்புத்தடை விதிக்க நேற்று முன்தினம் (05) நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பகிடிவதை காரணமாக மன உளைச்சலுக்குள்ளான சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் இரண்டாம் ஆண்டில் கல்விகற்று வந்த கெதெரு சரித் தில்ஷான் என்றழைக்கப்படும் 23 வயதுடைய இளைஞன் கடந்த மாதம் 29ஆம் திகதி கம்பளையிலுள்ள அவரின் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். 27ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது தாங்கிக் கொள்ள முடியாதளவுக்கு பகிடிவதையை எதிர்கொள்ள நேர்ந்ததாலேயே அவர் இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு கல்வி அமைச்சின் மட்டத்தில் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் பொலிஸ் விசாரணைகளும் இடம்பெற்றுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### இன்று இலங்கை...

உலக வங்கியின் தலைவர் அஜே பங்கா இன்று (07) இலங்கை வரவுள்ளார்.

உலக வங்கித் தலைவர் ஒருவர் 20 வருடங்களின் பின்னர் முதல் முறையாக நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அரச மற்றும் தனியார் பிரிவினர் உள்ளிட்ட பல தரப்பினரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது, சர்வதேச நாணய நிதியத்துடனான கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பிலும் முக்கிய கவனம் செலுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### வெற்றிகரமான தேர்தல்...

கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மிகவும் வெற்றிகரமாக தேர்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. எனவே, வெற்றிகரமான தேர்தல் முடிவுகள் வெளிவரும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இலங்கையின் அரசியலில் கலாசார மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் நாட்டு மக்கள் மிகவும் அமைதியான முறையில் வெற்றியைக் கொண்டாடினார்கள். அது மிகவும் முக்கியமானதாகும்.

எமது நாட்டின் ஜனநாயகத்தை தேர்தலும் உறுதிப்படுத்த வேண்டும். அதனால் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின்போது பின்பற்றிய பயணப்பாதையிலேயே இந்த உள்ளூராட்சித் தேர்தலின் பின்னரும் மக்கள் பின்பற்றி செயற்படுவார்கள் என்று நம்புகிறோம்.

எனவே, அமைதியை பாதுகாப்பதற்கான நிலைவரம் இந்தத் தேர்தலின் பின்னரும் இருக்குமென நம்புகிறோம்'' என்றார்.

### உள்ளூராட்சித் தேர்தல்...

நா.தினுஷா

நாட்டின் 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நேற்று மாலை நிறைவடைந்திருந்ததுடன் 4.00 மணியாகும்போது 52 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை வாக்குப்பதிவுகள் இடம்பெற்றிருந்தன.

அதற்கமைய, முதலாவது தேர்தல் முடிவு நேற்று மாலை 6.50 மணிக்கு வெளியாகியிருந்ததுடன் ஹம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தின் தங்காலை நகரசபைக்குரிய தேர்தல் முடிவு முதலில் வெளியிடப்பட்டது.

அந்த தேர்தல் முடிவுக்கமைய ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தையும் தேசிய மக்கள் சக்தி 09 ஆசனங்களையும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 03 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 05 ஆசனங்களையும் சர்வஜன அதிகாரம் ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டன.

இரண்டாவதாக வெளியான பதுளை மாவட்டத்தின் ஹப்புத்தளை நகர சபைக்கான தேர்தல் முடிவுகளின்படி,

சுயேச்சை குழு 01 - 1,038 வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதுடன், தேசிய மக்கள் சக்தி - 844 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தி - 374 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஹம்பாந்தோட்டை மாநகர சபைக்கான தேர்தல் முடிவுகளின்படி,

தேசிய மக்கள் சக்தி - 4,750 வாக்குகளைப் பெற்று 8 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி - 3,874 வாக்குகளைப் பெற்று 7 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதுடன், பொதுஜன ஐக்கிய முன்னணி - 1,511 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன - 1,279 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. சர்வஜன அதிகாரம் - 816 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தை கைப்பற்றியுள்ளது.

காலி மாவட்டத்தின் அம்பலாங்கொடை நகர சபைக்கான தேர்தல் முடிவுகளின்படி, தேசிய மக்கள் சக்தி - 5,736 வாக்குகளைப் பெற்று 11 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதுடன், ஐக்கிய மக்கள் சக்தி - 2,934 வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன - 1,928 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. ஐக்கிய தேசிய கட்சி - 553 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தை கைப்பற்றியுள்ளது. சுயேச்சை குழு - 552 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தை கைப்பற்றியுள்ளது. சர்வஜன அதிகாரம் - 447 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தை கைப்பற்றியுள்ளது.

முல்லைத்தீவு தேர்தல் மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கான தேர்தல் முடிவுகளின்படி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 808 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும் இலங்கை தமிழரசுக் கட்சி 1,364 வாக்குகளைப் பெற்று 04 ஆசனங்களையும் ஜனநாயக தமிழ் மக்கள் முன்னணி 500 வாக்குகளைப் பெற்று 02 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 607 வாக்குகளைப் பெற்று 02 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 990 வாக்குகளைப் பெற்று 03 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன.

இதன் பிரகாரம் இன்று மாலையாகும்போது சகல தேர்தல் முடிவுகளும் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை "உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்று (06) மாலை 4.00 மணியுடன் நிறைவடைந்தன. காலை 7 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு நடவடிக்கைகள் மாலை 4.00 மணிவரை மிகவும் அமைதியான முறையில் எந்தவொரு இடையூறுமின்றி இடம்பெற்றதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறியக்கிடைத்ததாக" தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

மேலும், அந்தந்த தேர்தல் தொகுதிகளுக்குள்ளேயே வாக்கெண்ணும் நடவடிக்கைகள், தேர்தல் முடிவுகளை வெளியிடும் பணிகள் என்பன இடம்பெற்று வருகின்றன.

எனவே, தேர்தல் ஆணைக்குழுவினால் தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் வரை மக்கள் வீடுகளிலேயே இருந்து அமைதியை கடைப்பிடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

கண்டி – 58 % வாக்குப்பதிவும் யாழ்ப்பாணம் - 57% வாக்குப்பதிவும் குருநாகல் - 55% வாக்குப்பதிவும் ஹம்பாந்தோட்டை – 61% வாக்குப்பதிவும் கொழும்பு – 52% வாக்குப்பதிவும் மாத்தறை – 58% வாக்குப்பதிவும் மாத்தளை – 62% வாக்குப்பதிவும் இரத்தினபுரி -60% வாக்குப்பதிவும் மட்டக்களப்பு - 61% வாக்குப்பதிவும் கிளிநொச்சி -60% வாக்குப்பதிவும் புத்தளம் – 55% வாக்குப்பதிவும் நுவரெலியா – 60% வாக்குப்பதிவும் முல்லைத்தீவு – 60% வாக்குப்பதிவும் மன்னார் -70% வாக்குப்பதிவும் பதுளை – 60% வாக்குப்பதிவும் அநுராதபுரம் - 60% வாக்குப்பதிவும் பொலனறுவை– 64% வாக்குப்பதிவும் மொனராகலை – 61% வாக்குப்பதிவும் கேகாலை – 58 % வாக்குப்பதிவும் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தேர்தலில் 2025 மார்ச் மாதம் 03 ஆம் திகதி மற்றும் 10 ஆம் திகதி தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்ட 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களுக்கமைய 49 அரசியல் கட்சிகள் இம்முறை தேர்தலில் போட்டியிடுகின்றன. அரசியல் கட்சிகளின் சார்பில் 2404 குழுக்களும் சுயாதீன குழுக்களாக 257 குழுக்களும் தேர்தலில் போட்டியிட்டன.

75,589 வேட்பாளர்கள் இந்த தேர்தலில் போட்டியிட்டார்கள். அத்தோடு ஒரு கோடியே 71 இலட்சத்து 56ஆயிரத்து 338 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர். அதற்கமைய, நாடு முழுவதும் 13,759 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்ததாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

தொகுதி அடிப்படையில் 5,052 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதுடன் விகிதாசார பட்டியல் முறையினூடாக (போனஸ் ஆசனங்கள்) 3,235 பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுவார்கள். நடளாவிய ரீதியில் 8,287 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்று நள்ளிரவு வரை வெளியான தேர்தல் முடிவுகளின் ஆளுங்கட்சி முன்னிலையில் இருந்தாலும் எதிர்பார்த்த ஆதிக்கத்தை காண முடியவில்லை.

### கொட்டாஞ்சேனை மாணவி...

விசாரணைகளை முன்னெடுக்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கொட்டாஞ்சேனை, கல்பொத்த வீதி பிரதேசத்தில் 16 வயது பாடசாலை மாணவியொருவர் தான் வசிக்கும் தொடர்மாடி குடியிருப்பில் 07ஆவது மாடியிலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி பதிவாகியிருந்தது. இது தற்கொலைச் சம்பவம் என்பதால் இதுதொடர்பில் கொட்டாஞ்சேனை பொலிஸாரினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெறும் வரும்நிலையில் எமது அமைச்சுடன் தொடர்புடைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தனது மகள் கல்வி கற்கும் கொழும்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையில் கணிதப் பாடம் கற்பிக்கும் ஆசிரியரினால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து அவரின் தாயாரினால் 2024.12.08ஆம் திகதி பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணை நடவடிக்கைகளின் பின்னர் பம்பலப்பிட்டி பொலிஸாரினால் இந்தக் குற்றச் செயலுடன் தொடர்புடைய சந்தேகநபரான கணிதப் பாடம் கற்பிக்கும் ஆசிரியரை கைதுசெய்யப்பட்டு 34205/03/25 ஆம் இலக்கத்தின் கீழ் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அவருக்கு தற்போது வரையில் வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் சரீரப் பிணையில் விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாணவி உயிரிழக்கும்போதும் அவர் மன அழுத்தத்துக்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார். மேற்குறிப்பிட்ட சகல விடயங்களையும் கருத்திற்கொண்டு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் அலுவலகத்துடன் இணைந்து மகளிர் மற்றும் சிறுவர்கள் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த தற்கொலை சம்பவம் தொடர்பில் உயிரிழந்த மாணவியின் தரப்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு இதுவரையில் முறைப்பாடு செய்யப்படவில்லை. அடுத்தகட்ட விசாரணை நடவடிக்கைகளுக்காக வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக நேற்று (06) அதிகார சபைக்கு வருகைதருமாறு மாணவியின் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், மாணவி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக கூறப்படும் பாடசாலை தேசிய பாடசாலை பிரிவுக்குட்பட்ட பாடசாலை என்பதால், சம்பந்தப்பட்ட ஆசிரியர் தொடர்பில் கல்வி அமைச்சினால் எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று முன்தினம் (05) கடிதத்தினூடாக கல்வி அமைச்சின் செயலாளரினூடாக எழுத்துமூலமாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இதுதொடர்பான விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# வியட்நாமுக்கான அரச விஜயத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்து நாடு திரும்பினார் ஜனாதிபதி அநுர





வியட்நாமுக்கான தனது மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று (06) பிற்பகல் வியட்நாம் அரசாங்கத்தின் சிறப்பு விமானத்தில் நாடு திரும்பினார்.

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் (Luong Cuong) இன் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த அரச விஜயத்தை மேற்கொண்டார்.

இந்த அரச விஜயத்தின்போது, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, வியட்நாம் ஜனாதிபதியுடன் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளை நடத்தியதுடன், பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச விடயங்கள் குறித்து வியட்நாம் அரச பிரதானிகளுடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்தினார்.

மேலும், ஜனாதிபதி கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டோ லாமுடனும் (To Lam) கலந்துரையாடினார். கடந்த 55 ஆண்டுகளாக உயர்ந்த அரசியல் நம்பிக்கை, நெருக்கமான மக்கள் உறவுகள் மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட பாரம்பரிய நட்புறவு மற்றும் பன்முக ஒத்துழைப்பின் வளர்ச்சியை இரு நாடுகளும் இதன்போது வலியுறுத்தின.

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்பையும், வலுவான ஒத்துழைப்பையும் எதிர்காலத்தில் தேசிய அபிவிருத்தியில் இன்னும் வலுவாகப் பேணுவதற்கு இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர்.

மேலும், ஜனாதிபதி வியட்நாம் போர் வீரர்கள் நினைவிடம் மற்றும் சுதந்திரப் போராட்டத் தலைவரும் சுதந்திர வியட்நாமின் முதல் ஜனாதிபதியுமான ஹோ சி மின் அவர்களின் சமாதியில் மலர் அஞ்சலி செலுத்தினார்.

இந்த அரச விஜயத்தின் போது, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, விங்குரூப் (Vingroup), சன் குழுமம் (Sun group), எப்.பி.டி. கூட்டுத்தாபனம் (FPT Corporation), சொவிகொ (SOVICO) குழுமம் ரொக்ஸ் (ROX) குழுமம் ஆகிய வியட்நாமில் உள்ள பாரிய அளவிலான தொழிலதிபர்களுடன் பல கலந்துரையாடல்களை நடத்தினார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி, தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய பௌத்த விகாரைகளில் ஒன்றான பாய் டின் (Bai Dinh) விகாரையின் புதிய போதி மதிலையும் திறந்து வைத்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தினக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஜனாதிபதி, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பௌத்த உறவுகளை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் அங்கு சிறப்புரையாற்றினார்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் இந்த விஜயத்தில் இணைந்தார்.

## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 24ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** அதிஷ்டத்தை சோதித்து பணத்தை இழப்பீர்கள். மனதை சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள்.

**ரிஷபம்** வீடு, வாகனத்தால் வீண் செலவுகள்அல்லது தொல்லைகள் ஏற்படும். தாயின் ஆசியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மிதுனம்** நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும். நண்பர் உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.

**கடகம்** வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள். கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.

**சிம்மம்** அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள். மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும்.

**கன்னி** நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள். உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

**துலாம்** குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம். தேவையற்ற பயணங்களால் வெறுப்படைவீர்கள். வீண் குழப்பம் வேண்டாம்.

**விருச்சிகம்** தொழில் ரீதியில் நீங்கள் பாராட்டுக்கள் கிடைக்கும்.விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு** புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும். திட்டமிட்ட காரியங் களில் சாதனை செய்வீர்கள்.

**மகரம்** தடைகள் வந்தாலும் சமாளித்துக் கொள்வீர்கள்.உங்கள் சொத்துக்களின் மீது கவனம் செலுத்துங்கள்.

**கும்பம்** ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள்.

**மீனம்** நினைத்த காரியத்தில் வெற்றி, நீங்கள் கேட்ட கடன் இன்று கிடைக்கும். உற்சாகமாக இருப்பீர்கள்.

**திதி** : தசமி மு.ப.10.20 வரை பின் ஏகாதசி
**நட்சத்திரம்** : பூரம் மு.இ.6.17 வரை பின் உத்திரம்
**பிறை** : வளர்பிறை
**யோகம்** : அமிர்த யோகம் மு.இ.6.17 வரை பின் சித்த யோகம்
**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்** : காலை 5.55 – 7.25 மணி வரை. காலை 8.55 – 9.55 மணி வரை. பகல் 1.25 – 2.55 மணி வரை. மாலை 3.55 – 4.55 மணி வரை.
**ராகு காலம்** : 11.55 – 1.25 மணி வரை
**எமகண்டம்** : 7.25 – 8.55 மணி வரை
**குளிகை** : 10.25 – 11.55 மணி வரை
**சந்திராஷ்டமம்** : மகர-கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். (பின்னிரவு 12.57 வரை மகர ராசியினருக்கு)

**அதிஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

இன்று முன்னிரவு 6.17 மணி வரை
அஸ்வினி, கார்த்திகை,ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம்,உத்திரம்,அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம்,உத்திராடம், திருவோணம்,சதயம்,உத்திரட்டாதி

**இன்று முன்னிரவு 6.17மணிக்கு மேல்**
பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம்,அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# மியன்மார் சைபர் குற்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் மீட்பு

மியன்மார் சைபர் குற்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கையர்கள் நேற்று (06) விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தாய்லாந்து அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து வெளிவிவகார அமைச்சு மற்றும் தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவற்றால் இதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மியன்மார் - தாய்லாந்து எல்லையில் உள்ள மியாவாடி பகுதியில் உள்ள மெசோத்தில் நேற்றுக் காலை தாய்லாந்து அதிகாரிகளால் தாய்லாந்துக்கான இலங்கை தூதுவர் விஜயந்தி எதிரிசிங்கவிடம் 15 இலங்கையர்கள் அடங்கிய குழு ஒப்படைக்கப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் மாரிஸ் சங்கியம்போங்சா மற்றும் மியன்மார் வெளியுறவு அமைச்சர் யூ தான் ஸ்வே ஆகியோருக்கு இடையேயான தொடர்ச்சியான தொலைபேசி உரையாடல்களின் விளைவாக இந்தக் குழு மீட்கப்பட்டது.

சைபர் குற்ற முகாம்களில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்கும் பணியில் இராஜதந்திர ரீதியாக தலையிட்ட தாய்லாந்து தூதரகம், போக்குவரத்து வசதிகளை வழங்கிய சர்வதேச இடம்பெயர்வு அலுவலகம், பிற நலன்புரி வசதிகளை வழங்கிய அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தாய்லாந்து மற்றும் மியன்மார் அரசாங்கங்களின் பங்களிப்பை அமைச்சர் விஜித ஹேரத் பாராட்டினார்.

## திருமலை மாவட்டத்தில் 68 சதவீத வாக்களிப்பு

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 68 சதவீத வாக்களிப்பு இடம்பெற்றிருக்கின்றது.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான வாக்களிப்பானது நாடளாவிய ரீதியில் நேற்று (06) காலை 7.00 மணிமுதல் ஆரம்பமாகியுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் வாக்காளர்கள் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை மிகவும் சுதந்திரமான முறையில் வாக்களிப்பு நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 68% ஆன வாக்களிப்பு இடம்பெற்றிருக்கின்றது என திருகோணமலை அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் 321 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கும் நடவடிக்கைகள் நிறைவுற்றதை தொடர்ந்து 129 நிலையங்களில் வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பமாகுமென மேலும் தெரிவித்தார்.

## மன்னார் மாவட்டத்தில் 70 வீத வாக்களிப்பு

(ஜோசப் நயன்)



மன்னார் மாவட்டத்தில் நேற்று (06) ஆரம்பமான உள்ளூராட்சி தேர்தலுக்கான வாக்களிப்புகள் நேற்று மாலை 4 மணியுடன் நிறைவடைந்தன.

எவ்வித வன்முறைகளும் இன்றி மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெற்றதாக மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று (06) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் 88 உறுப்பினர்களை தெரிவுசெய்ய 91 ஆயிரத்து 373 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இந்த நிலையில் நேற்று (06) மாலை வரை 64 ஆயிரத்து 904 வாக்காளர்கள் வாக்களித்திருக்கின்றனர்.

அதன் அடிப்படையில் மாவட்டத்தின் முழுமையான வாக்குப்பதிவு 70.15% ஆகும்.

மன்னார் நகர சபைக்கு 10,975 வாக்குகளும் மன்னார் பிரதேச சபைக்கு 16,939 வாக்குகளும் நானாட்டான் பிரதேச சபைக்கு 12,343 வாக்குகளும் முசலி பிரதேச சபைக்கு 10,819 வாக்குகளும் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 13,636 வாக்களும் அளிக்கப்பட்டுள்ளன.

மாலை 4.30 மணி அளவில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 47 வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

வட்டார ரீதியில் வாக்கு எண்ணும் நிலையங்களில் இருந்து தேர்தல் வாக்களிப்பு விபரங்கள் அறிவிக்கப்படும். முழுமையான வாக்களிப்பு முடிவுகள் மாவட்ட செயலகம் ஊடாக அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## குப்பிழான் வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியே புகைப்படம் எடுத்த ஊடகருக்கு பொலிஸார் மிரட்டல்!



(பு.கஜிந்தன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தினமான நேற்றுச் (06) மாலை-04.30 மணியளவில் குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியே புகைப்படங்கள் எடுத்த சுயாதீன ஊடகவியலாளருக்கு சுன்னாகம் பொலிஸார் மிரட்டல் விடுத்துள்ளனர். குறித்த ஊடகவியலாளரின் தேசிய அடையாள அட்டை, ஊடக அடையாள அட்டை என்பவற்றைப் கைப்பற்றி சுமார் இருபது நிமிடங்களுக்கு மேலாகத் தடுத்து வைத்து விசாரணை செய்த பொலிஸார் கைதுசெய்யப் போவதாகவும் மிரட்டியுள்ளனர்.

இறுதியாகச் சுயாதீன ஊடகவியலாளரின் தொலைபேசியிலிருந்த புகைப்படங்களை அவரது கைகளாலேயே அழிக்கச் செய்து விட்டு, தேசிய அடையாள அட்டை, ஊடக அடையாள அட்டை என்பவற்றைப் புகைப்படம் எடுத்த பின்னர் இனிமேல் தேர்தல் காலங்களில் வாக்களிப்பு நிலையத்தில் இவ்வாறு புகைப்படமெடுக்ககக் கூடாதென எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டார்.

எனினும், வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியே புகைப்படங்கள் எடுக்க அனுமதி உள்ளது என்பதைச் சுயாதீன ஊடகவியலாளர் தெளிவாகப் பொலிஸாருக்கு எடுத்துக் கூறியிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கண்டி மாவட்டத்தில் 58% வாக்களிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)



வாக்களிப்பு நிறைவ டையும்போது கண்டி மாவட்டத்தில் வாக்களிப்பு 58% ஆக இருந்ததாக கண்டி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி இந்திக உடவத்த தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிறைவடைந்ததைத் தொடர்ந்து நேற்று (6) பிற்பகல் கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவத்தாட்சி அதிகாரி இந்திக உடவத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி இந்திக உடவத்த,

கண்டி மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்களோ தேர்தல் சட்ட மீறல்களோ எதுவுமே பதிவாகவில்லை.

கண்டி மாவட்டத்தில் உள்ள 22 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 637 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக 12 இலட்சத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தெட்டு (1202558) பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர் .

கண்டி மாவட்டத்தில் உள்ள 22 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட 18 அரசியல் கட்சிகள் மற்றும் 20 சுயேச்சைக் குழுக்களில் இருந்து 637 உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்காக 4328 பேர் களத்தில் இறங்கியிருந்தனர்

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் 637 உறுப்பினர்கள் 01 மாநகர சபை, 04 நகர சபைகள் மற்றும் 17 பிரதேச சபைகளுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப் படுவார்கள்.

கண்டி மாவட்டத்தில் 937 வாக்களிப்பு நிலையங்களும் 368 வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதான செயற்பாட்டு அலுவலகம் மற்றும் தீர்மானங்கள் முடிவெடுக்கும் குழு கண்டி மாவட்ட செயலகத்தில் இருந்து செயற்படும்.

கண்டி மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று காலை 11 மணி நிலவரப்படி 21% ஆக இருந்தது. 937 நிலையங்களில் வாக்குப்பதிவு மாலை 4 மணிக்கு முடிவடைந்த பிறகு, 368 மையங்களில் முடிவுகள் எண்ணப்பட்டு, கண்டி மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாட்டு அலுவலகத்தில் முடிவுகள் பெறப்படும்.

தேர்தல் ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒட்டுமொத்த முடிவுகள் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## லொக்குபெட்டியின் வீட்டிலிருந்து கைக்குண்டு மீட்பு



திட்டமிடப்பட்ட பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய வெளிநாட்டில் தலைமறைவாகியிருந்த நிலையில், கைதான லொக்கு பெட்டி என்று அழைக்கப்படும் சுஜீவ ருவன் குமார டி சில்வா என்பவரது வீட்டிலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

லொக்கு பெட்டியிடம் நடத்தப்பட்ட விசாரணையின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக மேல் மாகாண தெற்கு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

வெலிப்பன்ன, தர்காநகர், மீகம, குருந்தா வீதியிலுள்ள அவரது வீட்டின் பின்னால் புதைக்கப்பட்ட நிலையில் இந்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

# அரசாங்க தரப்பினர் மீதான முறைப்பாடுகள்; மந்த கதியில் செயற்படும் தேர்தல் ஆணைக்குழு

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்க தரப்பினர் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைக்குழு மிக மந்த கதியில் செயற்படுவதாக முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பில் பங்கேற்றதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் நேற்று (06) இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் வெற்றியீட்டும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை என ஜனாதிபதி கூறிய விடயம் உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைக்குழு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலைமை மிகவும் கவலையளிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் பிரசார கண்காணிப்புப் பணிகளை தேர்தல் ஆணைக்குழுவும் உரிய நிறுவனங்களும் சரியான முறையில் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மே 07 ஆம் திகதி, புதன்கிழமை

# பகிடிவதைக் கொடூரம்!

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் மரணம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்ட மேலும் 6 மாணவர்கள் மே மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை நேற்று பலாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 04 ஆம் திகதி நான்கு மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு மே 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தற்போது, மேலும் ஆறு மாணவர்கள் கைது செய்யப்பட்டு மே மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதனால், இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 10ஐ எட்டியுள்ளது. இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய 11 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைகளில் பகிடிவதையை ஒழிப்போம் என்று காலாகாலமாகக் கூறினாலும் அது நடந்தபாடில்லை. அதுவும் நீண்ட பல ஆண்டுகளாக ஒழிப்போம், ஒழிப்போம் என்று கூறி நீடிக்கவிடப்பட்டிருக்கும் ஒரு விவகாரம்தான் பகிடிவதை. தற்போது அது இன்னொரு உயிரை இப்போது காவு கொண்டிருக்கின்றது.

ராக்கிங் என்பது புதிய மாணவர்களை மூத்த மாணவர்கள் மனரீதியாகவோ உடல்ரீதியாகவோ அல்லது உணர்வுரீதியாகவோ துன்புறுத்தும் ஒரு நடைமுறையாகும். இலங்கையில் குறிப்பாக, பல்கலைக்கழகங்களில் இது ஒரு நீண்டகால சவாலாக இருந்து வருகிறது.

ராக்கிங் பல வடிவங்களில் நிகழ்கின்றன. மனரீதியான அழுத்தம்: புதிய மாணவர்களை அவமானப்படுத்துதல், கேலி செய்தல் அல்லது பயமுறுத்துதல், உடல் ரீதியான துன்புறுத்தல்,சில சந்தர்ப்பங்களில் உடல் ரீதியான தாக்குதல்கள் அல்லது கடுமையான உடல் செயற்பாடுகளை செய்யக் கட்டாயப்படுத்துதல், புதிய மாணவர்களைக் குழுவிலிருந்து தனிமைப்படுத்துதல்.

இலங்கை பல்கலைக்கழகங்களில் மாணவர் சங்கங்கள் அல்லது குழுக்கள் (பெரும்பாலும் அரசியல் இயக்கங்களுடன் தொடர்புடையவை) ராக்கிங்கை ஒரு கருவியாகப் பயன்படுத்தி புதிய மாணவர்களைத் தங்கள் செல்வாக்கின் கீழ் கொண்டுவர முயல்கின்றன.

சில மூத்த மாணவர்கள் ராக்கிங்கை ஒரு 'பாரம்பரியமாக' கருதி தாங்கள் அனுபவித்தவற்றை புதியவர்களுக்கு பரிமாறுவதாக நினைக்கின்றனர். சமூக-பொருளாதார முரண்பாடுகள், கிராமப்புற மற்றும் நகர்ப்புற மாணவர்களுக்கிடையேயான பதற்றங்கள் அல்லது சமூக அடுக்கு வேறுபாடுகள் ராக்கிங்கை தூண்டலாம்.

இலங்கையில் ராக்கிங்குக்கெதிரான சட்டங்கள் உள்ளன. "Prohibition of Ragging and Other Forms of Violence in Educational Institutions Act" இன் கீழ், ராக்கிங் ஒரு குற்றமாகக் கருதப்படுகிறது. இதற்கு 2 முதல் 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். பல்கலைக்கழகங்கள் இந்தச் சட்டத்தைக் கண்டிப்பாக அமுல்படுத்த முயல்கின்றன. ஆனால், சில சமயங்களில் மாணவர் குழுக்களின் செல்வாக்கு இதற்கு தடையாக இருக்கிறது.

இலங்கை பல்கலைக்கழகங்களில் ராக்கிங் ஒரு தொடர்ச்சியான சவாலாக இருந்தாலும், சட்டரீதியான மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மூலம் இதைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பேராதனைப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட நிறுவனங்கள் ராக்கிங்குக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளன. இருப்பினும், மாணவர்கள், நிர்வாகம் மற்றும் சமூகத்தின் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலமே இந்தப் பிரச்சினையை முழுமையாக ஒழிக்க முடியும்.

ராகிங் கொடூரத்தில் ஈடுபடும் மாணவர்களைத் தண்டிப்பதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் புதிய அதிகாரங்களைக் கொண்ட ஓர் அதிகாரியை ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் நியமிக்க உயர்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. ராகிங் புகார்களைக் கையாளுவதற்குப் பொறுப்பாக சிறப்பான அதிகாரங்களோடு நியமிக்கப்பட்ட இந்த அதிகாரி பல்கலைக்கழக நிர்வாகக் குழுவில் உறுப்பினராக இருப்பார்.

"வார்டன்கள் மற்றும் மார்ஷல்கள் வளாகத்தில் இருந்தாலும் முறைப்பாடுகள் வரும்போது நடவடிக்கையெடுக்க அவர்களுக்கு முழு நிர்வாக அதிகாரம் இல்லை. அவர்கள் வெறுமனே முறைப்பாடளிக்க மட்டுமே முடியும். அவ்வளவுதான்'' - என்று பல்கலைக்கழக மானிய ங்கள் ஆணைக்குழுத் தலைவர் மூத்த பேராசிரியர் கபில செனவிரத்ன கூறினார்.

"பல்வேறு துறைகளிலும் நிபுணத்துவம் பெற்ற கவுன்ஸில் உறுப்பினர்கள் எங்களிடம் உள்ளனர். ஆனால், ராகிங் பிரச்சினை போன்றவற்றைக் கையாளத்தக்கவர்கள் ஒருபோதும் இல்லை. மேலும், விடயத்தை விசாரித்துத் தண்டிக்க ஒரு குறிப்பிட்ட அதிகாரம் கொண்ட அதிகாரி இருப்பது பொறுப்புக்கூறல் செயல்முறையை விரைவுபடுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்" - என்று பேராசிரியர் கபில செனவிரத்ன கூறினார்.

தற்போது மாநில பல்கலைக்கழகங்களுக்கு புதிய கவுன்ஸில்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த செயல்முறையின் போது புதிய அதிகாரியின் பங்கு இணைக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டிலும் சமூகத்திலும் உரிமைகளுக்காக குரலெழுப்பும் இளம் சமுதாயத்தினரான பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலேயே இந்த ராகிங் கொடூரம் - குரூரம் - குடிகொண்டிருப்பதென்பது நாகரிக மனித சமுதாயத்துக்கு பெரும் இழுக்காகும்.

இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டிய - நாகரிக மனித சமூகத்துக்கு ஒவ்வாத - இந்த ராகிங் காட்டுமிராண்டித்தனத்தை முழுமையாக இல்லாதொழிப்பதில் முழு நாடும் ஒற்றுமைப்பட்டு நிற்க வேண்டும். பகிடிவதைக் கொடூரம் இன்னும் இந்த நாட்டில் ஒரு பயங்கரவாதமாக அர்த்தப்படுத்தப்படாமல் இருப்பது இந்த நாடு மனித நாகரிக சமூகம் என்று சொல்வதற்குத் தகுதியற்ற நிலையைத் தந்து நிற்கின்றது.

நமது இளம் சமூகம் காமுகர்கள் கூட்டமாகவும் தறுதலைகளின் வேட்டைக்காடாகவும் இருப்பதை ஒழிப்பதற்கு இது விடயத்தில் தீவிரம் காட்டப்படுவது தவிர்க்க முடியாத கட்டாயம்.

போதைப்பொருள் கும்பல்களையும் பாதாள உலகக் குழுக்களையும் கையாளும் தீவிரத்தை விட அதி தீவிரத்துடன் இந்த ராகிங் மனநோயை அடக்க நடவடிக்கைகளைத் தயவு தாட்சண்யமின்றி எடுக்க வேண்டும். பிறப்புரிமைக்காகப் போராடியமையை பாஸிஸம் என்று வர்ணித்த நாடு, பகிடிவதை ஒழிப்பை கையில் எடுக்காமலிருப்பது ஏற்புடையதல்ல.



# நீரிழிவு நோயில் ஒரு புதிய வகை!



உடல் பருமன் இருந்தால்தான் நீரிழிவு நோய் வரும் என்று நினைக்கிறீர்களா? இனி அந்த நினைப்பைக் கைவிட்டுவிடுங்கள். ஒல்லியாக இருப்பவர்களுக்கும் நீரிழிவு நோய் வரலாம் என்கிறது மருத்துவ உலகம். சமீபத்தில் தாய்லாந்தில் நடைபெற்ற உலகளாவிய நீரிழிவு நோய் மாநாட்டில் இது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய நோய்க்கு 'ஐந்தாம் வகை நீரிழிவு நோய்' (Type 5 diabetes) என்று பெயரிடப்பட்டுள்ளது.

**நீரிழிவு நோய் வகைகள்:**

உடலில், கணையத்தில் இன்சுலின் துப்புரவாகவே சுரக்கவில்லையென்றால் முதலாம் வகை நீரிழிவு நோய் (Type 1 diabetes) வருகிறது. இது குழந்தைகளுக்கு வருகிற நீரிழிவு நோய். மாறாக, இன்சுலின் குறைவாகச் சுரந்தாலோ சுரந்த இன்சுலின் செயற்படாமல் போனாலோ இரண்டாம் வகை நீரிழிவு நோய் (Type 2 diabetes) வருகிறது. இது பெரும்பாலும் உடல் பருமன் உள்ளவர்களுக்கு வருகிறது.

மருந்துகளின் தூண்டுதல், கணைய நோய் போன்ற பிற காரணங்களால் மூன்றாம் வகை நீரிழிவு நோய் (Type 3 diabetes) வருகிறது. இது கர்ப்பிணிகளுக்கு வருகிற நீரிழிவு நோய் (Gestational Diabetes). நான்காம் வகை (Type 4 diabetes). இந்த வரிசையில் இப்போது புதிதாக ஐந்தாம் வகை நீரிழிவு நோய் இணைந்துள்ளது.

**வரலாற்றுப் பின்னணி:**

பருமனாக உள்ளவர்களின் உடலில் இன்சுலினுக்கு எதிர்ப்பு நிலை (Insulin Resistant) உருவாகிறது. அப்போது இன்சுலின் செயற்படாமல் போகிறது. இதனால் இரண்டாம் வகை நீரிழிவு நோய் வருகிறது. நீரிழிவு நோய் ஏற்படுவதில் உடல் எடை தொடர்பில் இந்தக் கண்ணோட்டமே நவீன மருத்துவத்தில் இதுவரை ஆதிக்கம் செலுத்தியது. இது தவறு. ஊட்டச்சத்துக் குறைபாடு (Malnutrition) இருக்கிறவர்களுக்கும் நீரிழிவு நோய் வருகிறது என்பதை முதன்முதலில் 1955இல் ஜமைக்கா நாடு கண்டறிந்ததும் இந்தக் கருத்தில் சந்தேகம் பிறந்தது.

அது மட்டுமன்றி, இந்த நோய் வித்தியாசமாக இளம் வயதினரிடமும் உடல் எடை குறைந்தவர்களிடமும் அதாவது, 'பிஎம்ஐ' (BMI) அளவு 18.5க்கும் குறைவாக இருந்தவர்களிடமும்தான் காணப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆபிரிக்கா மற்றும் உகண்டா போன்ற குறைந்த - நடுத்தர வருமானம் உள்ள நாட்டினரிடம்தான் (LMICs) இது காணப்பட்டது. வளர்ந்த நாடுகளில் இது காணப்படவில்லை.

அப்போது இதை 'ஜே வகை நீரிழிவு நோய்' (Jamaica type diabetes) என்று அழைத்தனர். இதைத் தொடர்ந்து, ஊட்டச்சத்துக் குறைபாடு சார்ந்த நீரிழிவு நோய் (Malnutrition-related diabetes mellitus) என்று 1985இல் உலகச் சுகாதார நிறுவனம் வகைப்படுத்தியது. ஆனால், ஊட்டச்சத்துக் குறைபாடு, புரதச்சத்துக் குறைபாடு காரணமாக நீரிழிவு நோய் ஏற்படுகிறது என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லை என்று கூறி 1999இல் இந்த வகையை அந்த நிறுவனம் கைவிட்டது.

**தமிழ்நாட்டு மருத்துவர்களின் சாதனை!**

- நியூயோர்க்கிலுள்ள ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் மெரிடித் ஹாக்கின்ஸ் என்னும் பெண் ஆராய்ச்சியாளர் 2005இல் மருத்துவச் சொற்பொழிவுக்காகப் பல நாடுகளுக்குச் சென்றபோது, வருமானம் குறைந்த நாடுகளில் ஊட்டச்சத்துக் குறைபாடு சார்ந்த சர்க்கரை நோய் இருப்பதை அறிந்து அது தொடர்பான ஆராய்ச்சியை மீண்டும் முன்னெடுத்தார். ஏற்கனவே அறியப்பட்டிருக்கும் முதலாம் வகை, இரண்டாம் வகை சர்க்கரை நோய்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இந்த நோய் இருப்பது அவரது கவனத்தை ஈர்த்தது.

இதனால், 2010இல் ஐன்ஸ்டைன் சர்வதேச நீரிழிவு நோய் நிறுவனத்தை நிறுவி ஓர் ஆராய்ச்சிக் குழுவையும் அமைத்தார். இந்தக் குழுவில் தமிழ்நாட்டிலிருந்து வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (CMC) மருத்துவர்கள் நிஹல் தோமஸ், ரித்தி தாஸ்குப்தா என்னும் இருவரையும் இணைத்துக்கொண்டார். பின்தங்கிய சமூகப் பொருளாதாரப் பின்னணியில் இருந்த 73 இந்திய ஆண்களிடம் 12 ஆண்டுகள் இந்த ஆராய்ச்சியை இவர்கள் மேற்கொண்டனர். இதில் பங்கெடுத்தவர்களில் 20 பேருக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு சார்ந்த நீரிழிவு நோய் இருப்பதை இவர்கள் உறுதிப்படுத்தினர்.

**எப்படி?**

ஆராய்ச்சிக்கு வந்தவர்களில் உடல் எடை குறைந்த நீரிழிவு நோயாளர்களை ஒரு பிரிவிலும் உடல் எடை குறைந்திருப்பவர்கள் ஆனால், நீரிழிவு நோய் இல்லாதவர்களை அடுத்த பிரிவிலும் சேர்த்துக்கொண்டனர். மூன்றாவது பிரிவில் இரண்டாம் வகை நீரிழிவு நோய் உள்ளவர்களை இணைத்துக்கொண்டனர். இவர்கள் எல்லோருக்கும் மரபுத்தன்மை காரணமாக நீரிழிவு நோய் வரவில்லை என்பதை முதலிலேயே உறுதிப்படுத்திக்கொண்டனர்.

பின்னர் இரத்தத்தில் சி-பெப்டைட் சுரப்பை அளந்து (C-peptide deconvolution) இவர்களுக்குத் தினமும் இன்சுலின் எவ்வளவு சுரக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டனர். இதை மூன்று பிரிவினரிடமும் ஒப்பிட்டுப் பார்த்தபோது முதலாம் பிரிவில் இருந்தவர்களுக்கு இன்சுலின் சுரப்பு மிகவும் குறைவாக இருந்தது. இவர்கள் உடலில் உறுப்புக் கொழுப்பும் (Visceral Fat) வயிற்றுக் கொழுப்பும் (Adipose Fat) இல்லை. கல்லீரலிலும் கொழுப்புச் சுரப்பு அதிகமாக இல்லை. ஆனாலும், இவர்களுக்கு நீரிழிவு நோய் வந்திருக்கிறது. ஊட்டச்சத்துக் குறைவினால் கணைய வளர்ச்சி குறைந்துபோனதுதான் இதற்குக் காரணம் என்பதை மெய்ப்பித்தனர்.

இந்த ஆராய்ச்சி தொடர்பான கட்டுரை 2022இல் 'டயபெடிக் கெயார்' (Diabetic Care) என்னும் ஆய்விதழில் வெளிவந்தது. 2023இல் 'சயின்டிஃபிக் அமெரிக்கன்' (Scientific American) என்னும் ஆய்விதழ் இதை மதிப்பாய்வு (Peer review) செய்தது. 2025 ஏப்ரல் 7இல் பாங்கொக்கில் நடைபெற்ற உலகச் சர்க்கரை நோய் காங்கிரஸ் (World Diabetes Congress) மாநாட்டில் சர்வதேச நீரிழிவுக் கூட்டமைப்பு (International Diabetes Federation) இந்த ஆராய்ச்சியை அங்கீகரித்து, இந்தப் புதிய நோய்க்கு 'ஐந்தாம் வகை சர்க்கரை நோய்' என்று பெயரிட்டது. அத்தோடு, நீரிழிவு நோய் மாத்திரைகளால் இதைக் கட்டுப்படுத்த முடியுமென்பதையும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

**என்ன வித்தியாசம்?**

- முதலாம் வகை, இரண்டாம் வகை சர்க்கரை நோயாளிகளுக்கும்தான் இன்சுலின் சுரப்பு இல்லாமலோ குறைந்தோ இருக்கிறது. அப்படியானால், இந்த ஐந்தாம் வகை நீரிழிவு நோய்க்கும் மற்ற வகைகளுக்கும் என்ன வித்தியாசம்? இந்தக் கேள்விக்கும் ஹாக்கின்ஸ் குழுவினர் பதில் தந்துள்ளனர்.

அதாவது, மற்ற வகை நீரிழிவு நோயாளர்களுக்கு இரத்தச் சர்க்கரையின் அளவு கடுமையாகிவிட்டால் உயிருக்கு ஆபத்தைத் தருகிற 'கீட்டோன் அமில மிகைநிலை' (Ketoacidosis) ஏற்படும். ஆனால், ஐந்தாம் வகை நீரிழிவு நோய் இருப்பவர்களுக்கு இந்த நிலைமை ஏற்படவில்லை. மேலும், இரண்டாம் வகை நீரிழிவு நோயாளர்களுக்கு இன்சுலின் எதிர்ப்பு நிலை இருக்கும். இவர்களுக்கு இன்சுலின் எதிர்ப்பு நிலை (Insulin Resistant) இல்லை. மாறாக, இன்சுலின் சுரப்பு குறைவாக (Insulin Deficiency) இருந்தது.



**ஆராய்ச்சி அளித்துள்ள எச்சரிக்கை:**

உலகளவில் சுமார் 3 கோடி பேருக்கு ஐந்தாம் வகை நீரிழிவு நோய் இருக்கிறது. பெரும்பாலும் ஏழை நாடுகளில்தான் இது காணப்படுகிறது. இதுவரை இந்த நோயாளர்களுக்கு முதலாம் வகை நீரிழிவு நோய் இருப்பதாகத் தவறாகக் கணித்து இன்சுலின் சிகிச்சையை வழங்கிவந்தனர். இனி, இவர்களுக்கான சிகிச்சை மாறும். குறிப்பாக, இன்சுலின் செலவைக் குறைத்துக்கொள்ள முடியும். ஒல்லியாக இருப்பவர்கள் தங்களுக்கு நீரிழிவு நோய் வராது என இனிமேல் அலட்சியமாக இருக்க முடியாது.

ஊட்டச்சத்துக் குறைவால் இவர்களுக்கு நீரிழிவு நோய் வரலாம். உடல் எடை குறைவாகப் பிறக்கும் குழந்தைகளுக்குச் சரியான ஊட்டச்சத்து கிடைக்காவிட்டால் அவர்களுக்கும் நீரிழிவு நோய் ஏற்படலாம். இனி இந்தக் குழந்தைகளும் சரியான உடல் எடையுடன் வளர்க்கப்பட வேண்டும்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த அதிக மாச்சத்துள்ள உணவு வகைகளைக் குறைவாக எடுத்துக்கொள்வதுபோல், உடல் எடையைச் சரியாகப் பேண புரதம், ஆரோக்கியக் கொழுப்பு, ஊட்டச்சத்து, நார்ச்சத்து ஆகியவை அடங்கிய உணவு வகைகளை அதிகம் சாப்பிட வேண்டியது அவசியம்.

**மருத்துவர் கு.கணேசன்**
**நன்றி - இந்து**

## இன்றைய நாளில்...


- 1930 – 7.1 அளவு நிலநடுக்கம் வடமேற்கு ஈரானையும் தென்கிழக்கு துருக்கியையும் தாக்கியதில் 3,000 பேர் வரை உயிரிழந்தனர்.
- 1946 – சோனி நிறுவனம் 20 தொழிலாளர்களுடன் டோக்கியோவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1992 – நாசாவின் எண்டெவர் விண்ணோட்டம் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது.

## நக்கல் நமசிவாயம்

**இன்னுமொரு வாரத்துக்கு பட்டாசு வியாபாரம் நல்லா ஓடும் என்னங்கோ?**



# ஜனாதிபதி அநுரவுக்கும் வியட்நாம் வர்த்தக சமூகத்துக்கும் இடையிலான கலந்துரையாடல்





ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வியட்நாம் விஜயத்தின்போது, வியட்நாம் வர்த்தக சமூகத்தினருடன் பல கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

அதன்படி, ஆதன வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் முன்னணி முதலீட்டாளரான விங்குரூப்பின் (Vingroup) உயர் நிர்வாக அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில், உப தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி வின் வியட் குவெங் (Nguyen Viet Quang) உள்ளிட்ட உயர் நிர்வாகத்தினர் கலந்துகொண்டனர்.

வியட்நாமில் கவர்ச்சிகரமான பூங்கா அபிவிருத்தியில் முன்னணியில் இருக்கும் நிறுவனமான சன் குழுமத்துடன் (Sun group) இடம்பெற்ற கலந்துரையாடலில் அதன் தலைவர் டன்ங் மின் ட்ரூங் (Dang Minh Truong) பங்கேற்றார்.

டிஜிட்டல் பரிமாற்றத்தில் முன்னோடியாக உள்ள எப்.பி.டி. கூட்டுத்தாபனத்தில் (FPT Corporation) இடம்பெற்ற கலந்துரையாடலில் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நுயென் வேன் கொஆ (Nguyen Van Khoa) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Vietjet Air இன் தலைமை நிர்வாக அதிகாரி டின் வியட் பூங் இன்(Dinh Viet Phuong) பங்கேற்புடன் சொவிகொ (SOVICO) குழுமத்துடன் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், ரொக்ஸ் (ROX) குழுமத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் ரொக்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டிரன் சுவன் குவன் (Tran Xuan Quang) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல்களில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் பங்கேற்றார்.

# வவுனியாவில் 59 சதவீத வாக்களிப்பு



வவுனியாவில் 59.56 சதவீத வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளதாக மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

வாக்களிப்பு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

''உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று (06) காலை ஆரம்பமாகிய நிலையில், வவுனியாவில் அமைதியான முறையில் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. காலை முதல் மக்கள் ஆர்வத்துடன் சென்று வாக்களித்த நிலையில் மாலை 04 மணியுடன் வாக்களிப்புப் பணிகள் நிறைவுக்கு வந்தன.

வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய 05 சபைகளுக்கும் 86 வட்டாரங்களில் 103 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 1,231 பேர் போட்டியிட்டனர்.

மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 29ஆயிரத்து 293 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த நிலையில் 154 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெற்றது. 56 வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் அமைதியான வாக்களிப்பு இடம்பெற்றது.

இதேவேளை, வாக்களிப்பு நடவடிக்கை முடிவடைந்துள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குப்பெட்டிகள் அனைத்தும் அந்தந்த வட்டாரங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாக்கெண்ணும் நிலையங்களுக்கு கொண்டுசெல்லும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக மாலை 4.30 மணிக்கு வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வாக்களிப்பு செயற்பாடுகள் சுமுகமாக இடம்பெற்றுள்ளதுடன், மாவட்டத்தில் பாரதூரமான தேர்தல் வன்முறைகள் எவையும் பதிவாகவில்லை. அமைதியான தேர்தலுக்கு ஒத்துழைத்த அனைத்து தரப்பினருக்கும் நன்றி'' என்றார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்- 458

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக் களம் -458 நிகழ்வானது கா.பொ.இரத்தினம் அரங்கில் றோயல் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலக்கியக்கள நிகழ்ச்சியில் “மனங் கவர்ந்த குறள்கள்” எனும் தலைப்பில் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் உரையாற்றவுள்ளார்.

# 4.4 மில்லியன் பெறுமதியான சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது



டுபாயிலிருந்து நாடு திரும்பிய ஊழியர் ஒருவர், நேற்று (06) கட்டுநாயக்க விமான நிலையத்தில், ரூ.4.4 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதியுடைய சிகரெட்டுகளை கடத்தியதற்காக சுங்கத்துறையினரால் கைதுசெய்யப்பட்டார்.

பயணி டுபாயிலிருந்து சிகரெட்டுகளை வாங்கி, பின்னர் பஹ்ரைனுக்குப் பயணம் செய்து, GF 144 என்ற விமானத்தில் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

வருகை முனையத்தில் சோதனை செய்த சுங்க அதிகாரிகள் 25,400 சிகரெட்டுகள் கொண்ட 127 பெட்டிகளைப் பறிமுதல் செய்தனர். இந்த குறிப்பிட்ட சிகரெட்டில் இரண்டு சுவைகள் உள்ளதாக சுங்கத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதான சந்தேகநபர் குருநாகலைச் சேர்ந்த 29 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் டுபாயில் சாரதியாக பணியாற்றியுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பாக இலங்கை சுங்கத்துறை விசாரணை நடத்தி, ரூ.100,000 அபராதம் விதித்த பின்னர் சிகரெட்டுகளை பறிமுதல் செய்துள்ளது.

# மாத்தளை மாவட்டத்தில் 61வீத வாக்குப்பதிவு

(யடவத்த செய்தியாளர்)



மாத்தளை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 61.77 சதவீத வாக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட செயலாளரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான தேஜானி திலகரத்ன தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று (06) மாலை கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,மாத்தளை மாவட்டத்தில் நான்கு தேர்தல் தொகுதியில் உள்ள 342 வாக்களிப்பு நிலையங்களில் நேற்றுக் காலை 07 மணிமுதல் பிற்பகல் நான்கு மணிவரை வாக்குப் பதிவு இடம்பெற்றது.

காலை 07 மணிமுதல் 11 மணிவரை 25 சதவீதமும் பிற்பகல் 02 மணியளவில் 43 சதவீதமும் இம்மாவட்டத்தில் வாக்குப் பதிவாகி யுள்ளது. எவ்வித வன்முறைச் சம்பவங்களும் இன்றி மிகவும் சுமுகமான முறையில் வாக்களிப்பு பணிகள் இடம்பெற்றன. இம்மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 273 உறுப்பினர்களை தெரிவுசெய்ய 14 அரசியல் கட்சிகளும் நான்கு சுயேச்சை குழு என 2,300 பேர் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0 மத்திய வங்கியினால் அங்குரார்ப்பணம்



இலங்கை மத்திய வங்கியினால் நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0 அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0 இனை இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (05) அங்குரார்ப்பணம் செய்து, காலநிலை – தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் சமூக ரீதியாக அனைவரையும் உள்ளடக்குகின்ற நிதியியல் முறைமையைப் பேணி வளர்த்தல் என்பவற்றுக்கான அதன் தொடர்ச்சியான முயற்சிகளில் முக்கிய மைல்கல்லொன்றை அடையாளப்படுத்தியது.

விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பன மீது காலநிலை தொடர்புபட்ட இடர்நேர்வுகளின் வளர்ந்துவருகின்ற உள்ளார்ந்தங்களை இனங்கண்டு, முதலாவது நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டலை 2019இல் இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியதுடன் சுற்றாடல், சமூகம் மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை முகாமைசெய்கின்ற அதேவேளை பசுமை மற்றும் அனைவரையும் உள்ளடக்குகின்ற பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு நிதியிடுவதை ஊக்குவிப்பதன் மீது நிதியியல் நிறுவனங்களுக்கு இது அடிப்படை வழிகாட்டலை வழங்கியுள்ளது.

உலகளாவிய அபிவிருத்திகள் படிப்படியாக வளர்ச்சியடைகின்றமை, காலநிலையை மையப்படுத்திய நிதியிடலுக்கு பெறுவழி அதிகரிக்கின்றமை, அத்துடன் நிலைபெறுதன்மை பற்றிய சமூக பரிமாணத்தின் பரந்தளவில் அங்கீகரிக்கப்பட்டமை என்பவற்றைக் கொண்ட பின்னணியில் இலங்கை மத்திய வங்கியானது தென்னாசியாவில் துரிதப்படுத்தப்பட்ட காலநிலைக்கு சாமர்த்தியமான மற்றும் அனைவரையும் உள்ளடக்குகின்ற உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்துடனான பங்குடைமையுடன் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதியியல் ஆதரவுடன் 2025 - 2029 காலப்பகுதிக்காக நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0 இனை உருவாக்கியுள்ளது.

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, இலங்கை வங்கியாளர்களின் அமைப்பு, இலங்கை நிதி நிறுவனங்களின் அமைப்பு, நிதியியல் நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள் என்பன உள்ளடங்கலாக பல முக்கிய பங்குதாரர்களுடனான நெருங்கிய கூட்டிணைப்புடன் வழிகாட்டல் 2.0 வரையப்பட்டுள்ளது.

இலங்கையின் நிதியியல் துறையை மையப்படுத்தி வங்கித்தொழில், வங்கியல்லாத் தொழில், மூலதனச் சந்தை மற்றும் காப்புறுதித்துறைகள் என்பவற்றுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய முன்னுரிமையளிக்கப்பட்ட நடவடிக்கைகளின் தொகுதியொன்றை வழிகாட்டல் 2.0 எடுத்துரைக்கின்றது. இந்நடவடிக்கைகள் நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கு நிதியளித்தல், சுற்றாடல் மற்றும் சமூக இடர்நேர்வுகளின் முகாமைத்துவத்தை பலப்படுத்தல், அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்தல்களை மேம்படுத்தல் அத்துடன் நிறுவனங்களுக்கிடையில் ஆளுகை மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்தல் என்பனவற்றை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் கெவோர்க் சார்க்ஸ்யான், பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அலுவலர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள், இலங்கை அரசாங்க நிறுவனங்களின் சிரேஷ்ட அலுவலர்கள், நிலைபெறுதன்மை மீதான தேசிய மற்றும் பன்னாட்டு நிபுணர்கள், நிதியியல் நிறுவனங்களின் மற்றும் பங்காளர் முகாமையாளர்களின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக சிறப்பு அதிதிகள் இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தனர்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் பி.நந்தலால் வீரசிங்க தலைமையுரையை நிகழ்த்தி, நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0 இனைத் தொடங்கி வைக்கின்றமை வளர்ச்சியடைகின்ற காலநிலை மற்றும் சமூக சவால்களுக்கு மத்தியில் இலங்கையின் நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் அனைவரையும் உள்ளடக்குவதையும் வலுப்படுத்துவதில் முக்கிய படிமுறையொன்றைக் குறிக்கின்றது என்பதை எடுத்துக்காட்டினார். நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதனுள் காலநிலை சார்ந்த இடர்நேர்வுகளை ஒருங்கிணைப்பதற்கான அவசர மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கையின் தேவையை அவர் எடுத்துக்காட்டி வழிகாட்டல் 2.0 இன் செயற்றிறன்வாய்ந்த நடைமுறைப்படுத்தலை உறுதிசெய்வதற்கு வலுவான ஆர்வலர் ஒத்துழைப்புக்கும் அழைப்பு விடுத்தார்.

இந்நிகழ்வில் பேசுகையில், உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் கெவோர்க் சார்க்ஸ்யான், இலங்கையானது தாக்குப்பிடிக்கும் தன்மையையும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எய்த முயலுகையில், நாட்டை முதலீட்டுக்கு தயாராக நிலைநிறுத்துகின்ற அதே வேளை, வேலைவாய்ப்பை உருவாக்கவும் பொருளாதார விரிவாக்கத்தை முன்னெடுக்கவும் நிலைபெறத்தக்க நிதியானது இன்றியமையாததாக விளங்கும். இலங்கையில் மெய்யான நிலைபேறான நிதி முறைமையொன்றை உருவாக்குவது ஒரு கூட்டு முயற்சியாகும் என்பதை அவர் மேலும் வலியுறுத்தினார். இதன் தொடக்கத்திலிருந்தே பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் இதில் பங்கேற்று வருவதோடு, இலங்கை மத்திய வங்கி மற்றும் தொழிற்றுறை பங்குதாரர்களுடன் இணைந்து செயற்பட்டு, நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0 எனும் கூட்டு நோக்கத்தை நனவாக்க உறுதியுடன் உள்ளது.

தலைமையுரையைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கி உதவி ஆளுநர் திருமதி டபிள்யு.ஏ.டில்ருக்ஷினி மற்றும் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை அலுவலர் திருமதி வேய் யுவான் தலைமையில் நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0 பற்றிய அமர்வுக் கண்ணோட்டம் வழங்கப்பட்டது. நிலைபேறானதன்மை மீதான தேசிய தொழில்நுட்ப நிபுணர் முனைவர் துஷித சுகதபால, இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திருமதி எஸ்.கெடவல, டி.எவ்.சி.சி. வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலர் திமல் பெரேரா, கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் நியமிக்கப்படவுள்ள பிரதம ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரி திருமதி நிலுபா பெரேரா ஆகியோர் கலந்து சிறப்பித்த “நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0ஐ உத்தியோகபூர்மாக தொடங்கிவைத்தல்” பற்றிய குழு கலந்துரையாடலும் இடம்பெற்றது.

# நுவரெலியா மாவட்டத்தில் 60 சதவீத வாக்குப்பதிவு

## தெரிவத்தாட்சி அலுவலர் துஷாரி தென்னகோன் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று (06) காலை 07 மணிக்கு ஆரம்பமாகி மாலை 04 மணியுடன் நிறைவுபெற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் வாக்களிப்பு மாலை 04.00 மணிவரை சுமுகமாக இடம் பெற்றதாகவும் 60 சதவீதமான வாக்குகள் அளிக்கப்பட்டதாகவும் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான திருமதி துசாரி தென்னகோன் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று (06) நண்பகல் 12 மணிவரையான காலப்பகுதியில் 32 சதவீத வாக்குப் பதிவு இடம்பெற்றதாகவும் துஷாரி தென்னகோன் தெரிவித்தார்.

இதேவேளை, பிற்பகல் 02 மணிவரையான காலப்பகுதியில் நுவரெலியா மாவட்டத்தில் 53 சதவீத வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (06.05.2025)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 188.4729 | 198.1921 |
| கனேடியன் டொலர் | 212.0737 | 220.9129 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.3226 | 42.5358 |
| யூரோ | 332.1326 | 345.1090 |
| ஜப்பான் யென் | 2.0435 | 2.1222 |
| சிங்கப்பூர் டொலர் | 226.3124 | 236.3921 |
| ஸ்ரேலிங் பவுன் | 390.7832 | 404.9929 |
| சுவிஸ் பிராங் | 355.6930 | 371.8511 |
| ஐ.அ. டொலர் | 295.1849 | 303.6784 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 794.4423 |
| குவைட் | குவைட் தினார் | 976.6045 |
| ஓமான் | ஓமான் றியால் | 778.0062 |
| கட்டார் | கட்டார் றியால் | 82.1707 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 79.8626 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.5466 |

# யாழில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகரை தாக்கிய NPP ஆதரவாளர்கள்!



தேர்தல் நிலைமைகள் தொடர்பாக செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளரை தேசிய மக்கள் சக்திக் கட்சியின் ஆதரவுக் குழுவொன்று தாக்கிய சம்பவமொன்று வேலணை துறையூரில் நேற்று (06) இடம்பெற்றுள்ளது.

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பில் வேலணை பிரதேசத்தின் கள நிலைவரங்கள் குறித்து செய்தி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுட்டுக் கொண்டிருந்தவேளை வேலணை துறையூர் ஐயனார் வித்தியாலய வாக்காளர் மையத்தினருகே தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களின் இன்னொரு தரப்பினர் ஆதரவாளர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டிருந்த சம்பவத்தை வீடியோ எடுத்துக்கொண்டிருந்தபோதே குறித்த தேசிய மக்கள் சக்தியின் குழு ஊடகவியலாளரைத் தாக்கியுள்ளது.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வட கிழக்கில் தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பில்லை; இம்முறையும் தமிழர்கள் தான் ஆளப்போகின்றார்கள்

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(ஜோசப் நயன்)

''எங்களைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கை இம்முறையும் தமிழர்கள் தான் ஆளப்போகின்றார்கள். தேசிய மக்கள் சக்திக்கு ஒருக்காலும் இங்கு ஆள வாய்ப்பில்லை''- என உறுதிபடத் தெரிவிக்க விரும்புவதாக பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

விடத்தல்தீவு தூய ஜோசேப்வாஸ் மத்திய மகா வித்தியாலயத்தில் தனது வாக்கைச் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய பிரதேசங்களை நாங்கள் தான் ஆள வேண்டும். வடக்கு, கிழக்கிலே பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை என அனைத்தையும் தமிழர்கள் கைப்பற்றுவார்கள். குறிப்பாக, எங்கள் சங்கு சின்னம் ஆட்சியை நிர்ணயிக்கும் நிலையில் இருக்கும்.

தேசியத்தை நேசிக்கின்ற தமிழ்த் தரப்புகளுடன் மாத்திரமே ஆட்சி அமைப்பதற்கான பேச்சுவார்த்தை நடைபெறும். அந்த வகையிலே வடக்கு, கிழக்கிலே தமிழர்களின் ஆட்சிதான் நடக்குமென்பதுடன், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி ஒருபோதும் நடக்காது என்பதை தெட்டத்தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்''- எனவும் தெரிவித்தார்.



# வாள்களுடன் வாக்குச்சாவடிக்கு முன்னால் நின்றவர்கள் கைது





கிளிநொச்சி செல்வாநகர் வாக்களிப்பு நிலையத்துக்கு முன்னால் வாள்களுடன் நின்ற இரண்டு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கார் ஒன்றில் வாக்குச் சாவடிக்கு முன்னால் நேற்று (06) பிற்பகல் ஒருமணியளவில் சந்தேகத்துக்குரிய வகையில் நின்ற கார் ஒன்றை பொலிஸார் சோதனையிட்டபோது அதனுள் வாள் ஒன்றும் கத்தியொன்றும் காணப்பட்டுள்ளன.

இதனையடுத்து காரில் வந்த இரண்டு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டதோடு வாளும் கத்தியும் கைப்பற்றப்பட்டு அவர்களது காரும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# முச்சக்கரவண்டியில் வாக்காளர்களை ஏற்றி இறக்கிய தமிழரசுக் கட்சி உறுப்பினர் கைது

கிளிநொச்சியில் நேற்று (06) தனது முச்சக்கரவண்டியில் வாக்காளர்களை ஏற்றியிறக்கிய தமிழரசுக் கட்சி உறுப்பினரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்காளர்கள் பலரை தனது முச்சக்கரவண்டியில் ஏற்றியிறக்கிக்கொண்டிருந்தது மட்டுமன்றி, அவர் வாக்காளர்களைத் தனது கட்சிக்கு வாக்களிக்குமாறும் வலியுறுத்தியதாகத் தேர்தல் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், தேர்தல் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு பொலிஸாருடன் சென்று தமிழரசுக் கட்சியின் உறுப்பினரைக் கைதுசெய்துள்ளனர்.

# தந்தையை இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலை செய்த மகன் கைது

மாத்தளை, கலேவெல, மகுலுகஸ்வெவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மகன் தனது தந்தையை இரும்புக் கம்பியால் கொடூரமாகத் தாக்கிக் கொலை செய்துள்ளதாக மகுலுகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலைச் சம்பவம் நேற்று (06) காலை இடம்பெற்றுள்ளது.

மகுலுகஸ்வெவ, 04ஆவது மைல்கல் பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய தந்தையே கொலை செய்யப்பட்டுள்ளார்.

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.இதனையடுத்து 32 வயதுடைய மகளன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மகுலுகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் மாவட்டத்தில் அதிக ஆசனங்களை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பெறும்

## ரிஷாத் பதியுதீன் சூளுரை



(ஜோசப் நயன்)

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து தொலைபேசிச் சின்னத்தில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து சபைகளிலும் அதிகூடிய ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையிருப்பதாக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னார், தாராபுரம் அல்மினா மகா வித்தியாலயத்தில் தனது வாக்கைச் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் இம்முறையும் சுமுகமான முறையில் வாக்குப்பதிவுகள் இடம்பெற்றன. அதேநேரம், தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் யாருடன் இணைந்து ஆட்சியமைப்பது அல்லது யாருக்கு ஆதரவளிப்பதென்பது தொடர்பில் கலந்தாலோசிக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# எமது வெற்றிக்கான வாய்ப்புகள் எங்குமே பிரகாசமாகக் காணப்படுகின்றன

## தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவிப்பு



(பு.கஜிந்தன்)

''தமது உள்ளூர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொருத்தமான நபரைத் தெரிவுசெய்வதற்காக மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டனர். அந்தவகையில், எமது கட்சியைப் பொறுத்தவரை வெற்றிக்கான வாய்ப்புகள் எங்குமே பிரகாசமாகக் காணப்படுகிறது''- என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

ஸ்கந்தவரோதயா கல்லூரியில் தனது வாக்கை பதிவு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''பல சபைகளை நாங்கள் கைப்பற்றுவதற்கேதுவான நிலைமை காணப்படுகிறது. அத்துடன், இன்றைய சூழ்நிலையில் ஜே.வி.பிக்கு வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகிறது.

சபை அமைக்கின்றபோது தமிழ்க் கட்சிகள் சேர்ந்துதான் சபை அமைக்கின்ற நிலைமை காணப்படுகிறது. இதுவே நடக்குமென நினைக்கிறேன்''- எனத் தெரிவித்தார்.

# வாக்காளர்களுக்கு துண்டுப்பிரசுரம் வழங்கியவர் புத்தளத்தில் கைது

(ரஸீன் ரஸ்மின்

தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் புத்தளம், ரத்மல்யாய அல்காசிமி சிட்டி பகுதியில் வைத்து நேற்று (06) ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், ரத்மல்யாய – அல்காசிமி சிட்டி பகுதியிலுள்ள வாக்குச்சாவடிக்கு அண்மித்த பகுதியில் கட்சியொன்றின் ஆதரவாளரொருவர் வாக்களிக்க வருகைதரும் மக்களுக்கு கட்சியின் சின்னம் அடங்கிய சிறிய துண்டுப் பிரசுரத்தை விநியோகம் செய்த குற்றச்சாட்டில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட விஷேட பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் ரத்மல்யாய பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், புத்தளம் தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைத் தமிழரசுக்கட்சி வடகிழக்கில் அதிக இடங்களைக் கைப்பற்றும்

## ரவிகரன் எம்.பி. நம்பிக்கை

(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கைத் தமிழரசுக்கட்சி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நான்கு உள்ளூர் அதிகார சபைகளையும் கைப்பற்றுவதுடன், வட, கிழக்கு தமிழர் தாயகத்திலும் இலங்கைத் தமிழரசுக்கட்சி அதிக இடங்களைக் கைப்பற்றுமென வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்கு, பொதுநோக்கு மண்டபத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கைச் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றிவிட்டேன். நிச்சயமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகமான வட்டாரங்களில் வெற்றியீட்டி, முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள நான்கு உள்ளூர் அதிகார சபைகளையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றும்.

அத்தோடு, வடக்கு, கிழக்கில் எமது இலங்கைத் தமிழரசுக் கட்சி அதிகமான இடங்களைக் கைப்பற்றும் என்பதையும் திடமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்'' - என்றார்.









அன்னை சாயி ஈஸ்வராம்பாள் ஞாபகார்த்த தினமும் சாயி பாலவிகாஷ் அறநெறி பாடசாலையின் 50ஆவது ஆண்டு பூர்த்தி பொன்விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி மத்திய நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் நடைபெற்றன. இதன்போது, பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி ஓய்வுநிலை அதிபரும் சாயி அறநெறி பாடசாலையின் தற்போதைய தலைமை ஆசிரியருமான எஸ்.கருப்பையா, பிரதம அறங்காவலரை கௌரவித்தார். சாயி மகளிர் சங்கத் தலைவி சர்வகுணதேவி சண்முகநாதன், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் சார்பில் சியாமளா ரவிச்சந்திரனால் கௌரவிக்கப்பட்டார். சாயி அறங்காவலர் சபை பொதுச்செயலாளர் சிவா இராஜஜோதி உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

## Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address :- The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# வாக்களிப்பில் ஆர்வத்துடன் கலந்துகொண்ட மட்டக்களப்பு மக்கள்

## எம்.பிக்களான கந்தசாமி பிரபு, சாணக்கியன், ஸ்ரீநேசன், ஸ்ரீநாத் ஆகியோரும் வாக்களிப்பு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

உள்ளூராட்சி மன்றங்களுக்காகத் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்காக பட்டிருப்புத் தொகுதியிலுள்ள மக்களும் மிகவும் ஆர்வத்துடன் வாக்களிப்புகளில் கலந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள மண்முனை தென் எருவில் பற்று, போரதீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு ஆகிய மூன்று பிரதேசங்களிலும் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களும் தத்தமது ஆதரவாளர்களுடன் இணைந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தமது வாக்குகளைப் பதிவு செய்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு மட்டக்களப்பு இருதயபுரத்திலுள்ள பாலர் பாடசாலையிலும் இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீநேசன், இளையதம்பி ஸ்ரீநாத் ஆகியோர் தாண்டவன்வெளி ஜோசப் வாஸ் வித்தியாலயத்திலும் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்திலும் பதிவு செய்த அதேவேளை, முன்னாள் மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் கல்லடி விநாயகர் வித்தியாலயத்திலும் பதிவு செய்தார். தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி, தமிழரசுக் கட்சி உள்ளிட்ட பல அரசியற் கட்சிகளின் வேட்பாளர்களும் தமது வாக்கைப் பதிவு செய்தனர்.



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நேற்றுக் காலை இடம்பெற்றது. காரைதீவு விக்னேஸ்வர வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளர்கள் வாக்களித்தனர். இங்கு பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (காரைதீவு செய்தியாளர்)

# கிழக்கிலங்கை அறபுக்கல்லூரியில் முப்பெரும் விழா



(கோணாவத்தை செய்தியாளர்)

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக்கல்லூரியில் முப்பெரும் விழா ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்றது.

கல்லூரிப் பணிப்பாளர் சபைத் தலைவர் யூ.எல்.ஏ.அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் அறபு மொழி பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எஸ்.எம்.ஜலால்தீன் விசேட அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது முன்னாள் பணிப்பாளர் சபையின் ஆயுட்காலத் தலைவர் பேராசிரியர் மர்ஹூம் அச்சி எம்.இஸ்ஹாக் ஞாபகார்த்த உரையையும் அவரது வாழ்க்கைப் பயணம் என்ற நூலையும் வெளியிட்டு வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கல்லூரி அதிபர் ஏ.எல்.எம்.அஷ்ரப் தலைமையில் கல்லூரிக்கு பங்களிப்பு செய்தவர்களுக்கான துஆப் பிரார்த்தனையும் பட்டம் பெற்ற உலமாக்கள் மற்றும் ஹாபிழ்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

பிரதம பேச்சாளராக எம்.எச்.எம்.லபீர் (முர்ஷி) உட்பட பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள், உஸ்தாதுமார்கள், பகுதி நேர ஆசிரியர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள், மூத்த உலமாக்கள், கலாசார உத்தியோகத்தர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், பள்ளிவாசல் தலைவர்கள், அதிபர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உலக கைச் சுகாதார தினத்தை முன்னிட்டு சித்திரக் கண்காட்சியும் விழிப்புணர்வும்




(பெரியநீலாவணை செய்தியாளர்)

மே மாதம் 05 ஆம் திகதி உலக கைச் சுகாதார தினமாகும். இதனை முன்னிட்டு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை ஏற்பாடு செய்த சித்திரக் கண்காட்சியும் கை கழுவும் முறை குறித்த விழிப்புணர்வு நிகழ்வும் திங்கட்கிழமை(05) கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் வைத்தியசாலை திறந்த வெளியில் இடம்பெற்றன.

இதன்போது ஆரம்ப சுகாதார நடவடிக்கைகளில் ஒன்றான கைச்சுகாதாரம் தொடர்பில் வைத்திய பணிப்பாளரால் தெளிவுபடுத்தப்பட்டதுடன், கை கழுவும் செயல்முறையும் நேரடியாகச் செய்து காட்டப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டது.

இதேவேளை, கைச்சுகாதாரம் தொடர்பாக வைத்தியசாலை உத்தியோகத்தர்களால் வரையப்பட்ட விழிப்புணர்வு சித்திர ஆக்கங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டன. இந்தச் சித்திரக் கண்காட்சியில் வரையப்பட்டிருந்த ஆக்கங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டதுடன், சிறந்த ஆக்கங்கள் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் வைத்தியர் இங்கு குறிப்பிட்டார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் தாஹிறா சபியுத்தீன், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், நிர்வாக உத்தியோகத்தர், தாதிய உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதி செயலகத்தின் இரண்டாம் கட்ட நிதியுதவி வழங்கல்



(நாவிதன்வெளி செய்தியாளர்)

ஜனாதிபதி செயலகத்தால் சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகளுக்காக வழங்கப்பட்டு வரும் நிதியுதவி இம்முறை நிகழ்நிலை(Online) மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதனடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இவ்வுதவி வழங்கப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்தின் கோரிக்கைக்கமைய பிரதேச செயலகங்களினூடாக நிகழ்நிலை அடிப்படையில் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டு அதனடிப்படையில் தெரிவுகள் இடம்பெறுகின்றன.

அந்த வகையில், அம்பாறை மாவட்டத்தில் முதன்முதலாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட நான்கு நிகழ்நிலை விண்ணப்பங்களிலிருந்து இரண்டாம் கட்டமாக மூவர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிதியுதவி வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் திங்கட்கிழமை(05) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளர் ஏ.எல்.மஹ்ரூப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இந்த மருத்துவ உதவிக்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா, சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.சாபிர், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.எம்.நளீர், அபிவிருத்தி உத்தியோகத்தர் முஹம்மட் ரிபாஸ், கிராம சேவை உத்தியோகத்தர் ஜே.சாம் டிலோஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளினியடி-03 ஐச் சேர்ந்த யூ.எல். உமர் கர்தா, விளினியடி -02 ஐச் சேர்ந்த வை.எல்.அலிமா உம்மா, சம்மாந்துறை 01ஐச் சேர்ந்த ஏ.மஹ்மூத்லெவ்பை என்பவர்களுக்கு மேற்படி ஜனாதிபதி செயலக நிதியுதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஏறாவூர் நகர சபைக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதன்மை வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.நளீம் ஏறாவூர் டாக்டர் அஹமட் பரீட் வித்தியாலயத்தில் வாக்களித்தார். (ஏறாவூர் செய்தியாளர்)




ஐக்கிய மக்கள் சக்தியின் ஏறாவூர் நகர சபைக்கான முதன்மை வேட்பாளரும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.சுபைர் ஏறாவூர் அல்-ஜுப்ரிய்யா வித்தியாலயத்தில் தனது வாக்கைப் பதிவு செய்தார். (ஏறாவூர் செய்தியாளர்)



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தினமான நேற்று(06) இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் திருகோணமலை தமிழ் மகாவித்தியாலயத்தில் தனது வாக்கைப் பதிவு செய்தார். அவர் 90 வீதமான வாக்களிப்பு இடம்பெறும் என்பதுடன் தமிழரசுக் கட்சிக்கு அதிக ஆதரவு உள்ளதாகவும் தெரிவித்தார். (கிண்ணியா செய்தியாளர்)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நேற்று (06) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியான முறையில் நடைபெற்றது. காலை 7.00 மணிக்கு ஆரம்பமான நிலையில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது ஆதரவாளர்களுடன் சென்று வாக்குகளை பதிவு செய்தனர். (கல்லடி செய்தியாளர்)







அட்டாளைச்சேனை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களமிறங்கியுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் புறத்தோட்ட வட்டார வேட்பாளர் ஏ.எல்.எம்.இபாஸ் மற்றும் சுயேச்சைக் குழு காற்பந்து அணியின் முதன்மை வேட்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் ஆகியோர் தங்களது வாக்கை மீனோடைக்கட்டு டாக்டர் ஜலால்தீன் வித்தியாலயத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பட்டியல் வேட்பாளர் முஹம்மது றியாஸ் நப்லா அந்நூர் மகா வித்தியாலயத்திலும் பதிவிட்டனர். (மீனோடைக்கட்டு செய்தியாளர்)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று (06) நடைபெற்ற நிலையில் காத்தான்குடி மில்லத் மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் குடும்பத்தினருடன் சென்று தனது வாக்கைப் பதிவு செய்தார்.

# அமைதியான முறையில் நடைபெற்ற திருமலை மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்





*(சீனக்குடா செய்தியாளர்)*

திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நேற்று(06) நடைபெற்றது.

இந்த மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக காலை 7.00 முதல் வாக்களிப்பு ஆரம்பமானது. இந்த மாவட்டத்தில் காலை 9.15 மணிக்கு 16.1 வீதமும் காலை 10 மணிக்கு 22.2 வீதமும் வாக்களிக்கப்பட்டதாக திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் அத்தியட்சகர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்தகுமார தெரிவித்தார்.

ஒரு மாநகர சபை, ஒரு நகர சபை மற்றும் 11 பிரதேச சபைகள் உட்பட மொத்தம் 13 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 221 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இந்த மாவட்டத்தில் 321 வாக்களிப்பு நிலையங்களும் 129 வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைகளை மேற்கொள்வதற்காக அரச உத்தியோகத்தர்கள் 3,820 பேரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 1,700 பேரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். திருகோணமலை, மூதூர், சேருவில ஆகிய தேர்தல் தொகுதிகளைக் கொண்ட திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் இம்முறை மொத்தமாக 3,19,399 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

திருகோணமலை மாநகர சபையில் 38,338 பேரும் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையில் 35,617 பேரும் குச்சவெளி பிரதேச சபையில் 29,540 பேரும் தம்பலகாமம் பிரதேச சபையில் 24,761 பேரும் சேருவில பிரதேச சபையில் 11,859 பேரும் வெருகல் பிரதேச சபையில் 9,840 பேரும் கந்தளாய் பிரதேச சபையில் 39,124 பேரும் மொரவெவ பிரதேச சபையில் 6,692 பேரும் பதவிசிறிபுர பிரதேச சபையில் 9,740 பேரும் மூதூர் பிரதேச சபையில் 50,671 பேரும் கிண்ணியா நகர சபையில் 29,131 பேரும் கிண்ணியா பிரதேச சபையில் 27,168 பேரும் கோமரன்கடவெல பிரதேச சபையில் 6,692 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், கிண்ணியா ஜொஹரா உம்மா வித்தியாலயத்திலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கிண்ணியா ரீ.பி.ஜாயா மகளிர் மகா வித்தியாலயத்திலும் தமது வாக்கைப் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# வன்முறையற்றதும் அமைதியானதுமான தேர்தல் செயற்பாடுகள் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் 24.5 வீதம் வாக்குப்பதிவு: வாக்களிப்பு நிலைவரங்கள் மந்த நிலையில்

## தெரிவத்தாட்சி அலுவலர் சிந்தக அபேவிக்ரம தெரிவிப்பு





*(பாறுக் ஷிஹான்)*

2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அம்பாறை மாவட்டத்தில் சுமுகமாகவும் மந்த கதியிலும் இடம்பெற்றது. குறிப்பாக, திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் அம்பாறை, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்புகள் சுமுகமாக நடைபெற்றதாகவும் 24.5 வீதம் வாக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட 19 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 4,78,000 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். அதேவேளை, 458 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்த நிலையில் 202 நிலையங்களில் வாக்குகள் எண்ணும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறு உரிய இடங்களில் எண்ணப்பட்டு அப்பகுதிக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தெரிவிக்கப்படும். பின்னர் தெரிவான பிரதிநிதிகள் குறித்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் அறிவிப்பார்.

தொடர்ந்து வாக்குகள் உள்ளிட்ட சகல ஆவணங்களும் மத்திய நிலையமான அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்துக்கு எடுத்துச்செல்லப்படும். பின்னர் உத்தியோகபூர்வமாக உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான பிரதிநிதிகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்படும். இதேவேளை, தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் நோக்குடன் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் வன்முறையற்றதும் அமைதியானதுமான தேர்தல் செயற்பாடுகள் நடைபெற்றன. பாரிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாதபோதும், சிறு சம்பவங்கள் பதிவாகியதாக தேர்தல் கண்காணிப்பு ஊடாக கிடைக்கப்பெற்றிருந்தன. மேலும், தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் பெவ்ரல் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் ஈடுபட்டிருந்தன. மேலும் வாக்களிப்பு நிலையமான அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியை சுற்றி மூன்றடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் சார்ஜன்ட் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை

## பதியத்தலாவையில் சம்பவம்

*(கனகராசா சரவணன்)*

அம்பாறை, பதியத்தலாவை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று(06) பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிபிலையைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் துனுகர முதியன்சேலாகே தனபால என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வழமைபோல நேற்றுக் காலை கடமையில் இருந்துள்ள நிலையில் அவரது ரி 56 ரகத் துப்பாக்கியால் கழுத்தில் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இதனையடுத்து சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக பதியத்தலாவை வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதியத்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 139 விதிமீறல்: வாகரையில் ஒரு வன்முறைச் சம்பவம் பதிவு

## 477 வாக்களிப்பு நிலையங்களில் 60.69 வீத வாக்குகள் பதிவு

## அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தெரிவிப்பு



*(மட்டக்களப்பு செய்தியாளர்)*

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிப்பு தினத்தில் மாத்திரம் 139 விதிமீறல் சம்பவங்களும் வாகரையில் ஒரு தேர்தல் வன்முறைச் சம்பவமும் பதிவாகியுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று(06) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்த அவர், மட்டக்களப்பு 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்ற தேர்தலில் பொதுமக்கள் மிக ஆர்வத்துடனும் அமைதியான முறையிலும் வாக்களித்தனர்.

வாக்களிப்பு நேரம் முடிவடைந்த பின்னர் பொதுமக்கள் மிகவும் அமைதியான முறையில் வீடுகளில் தங்கியிருக்க வேண்டும்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 455,520 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். 477 வாக்களிப்பு நிலையங்களில் 60.69 சதவீத வாக்குகள் பதிவாகிய நிலையில் பிற்பகல் 4.30 மணிக்கு பிறகு 144 தெரிவுசெய்யப்பட்டுள்ள வாக்கெண்ணும் நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படவுள்ளன என்றார்.



*கிண்ணியா அப்துல் மஜீது வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்காக வாக்காளர்கள் வரிசையில் காத்திருந்ததைக் காணலாம். (தம்பலகாமம் செய்தியாளர்)*



*பெவ்ரல் மற்றும் கபே ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையங்களில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டதைப் படங்களில் காணலாம். (ஏறாவூர், ஏறாவூர் மேலதிக செய்தியாளர்கள்)*

# கல்லாறு பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்ட 05 கிலோ எடையுள்ள 250 அரிசி மூடைகள்

## சந்தேகத்தின் அடிப்படையில் தேர்தல் அதிகாரிகளால் கைப்பற்றல்

*(மட்டக்களப்பு செய்தியாளர்)*



மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் பிரதான வீதியில் பட்டா ரக வாகனத்தில் ஒருதொகுதி அரிசிமூடைகள் கொண்டு செல்லப்படுவதாகவும் அது தேர்தலுக்காக மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்காக இருக்கலாமெனவும் தேர்தல் திணைக்களத்தின் மட்டக்களப்பு அலுவலகத்துக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய உடன் விரைந்து செயற்பட்ட தேல்தல் திணைக்கள அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை(04) இரவு உரிய வாகனத்தை அவதானித்துள்ளனர்.

பின்னர் அரிசி மூடைகளை ஏற்றிக்கொண்டு சென்ற வாகனத்தையும் உரிய சாரதியையும் அழைத்துக்கொண்டு களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதனை விசாரித்த பொலிஸார் குறித்த அரிசி மூடைகளை ஏற்றிக்கொண்டு சென்றதான குறித்த அரிசிமூடைகள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதெனவும் அதில் எந்தவித கட்சி சார்ந்த விடயங்களோ சின்னங்களோ இல்லையெனவும் வீதியில் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே அது தம்மிடம் அழைத்துவரப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தனர்.

தலா 05 கிலோ எடையுள்ள 250 அரிசி மூடைகள் ஏறாவூர் பகுதியிலிருந்து களுவாஞ்சிக்குடி பிரதேசத்தின் கல்லாறு பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன. கல்லாறு பகுதியிலிருந்து ஒருவர் வந்து அந்த அரிசி மூடைகளைப் பெற்றுக் கொள்ளவிருந்துள்ளார். எனினும், அரிசி மூடைகளை ஏற்றிக்கொண்டுவந்த வாகனத்தின் சாரதி உரிய நபருக்கு தொலைபேசி அழைப்பெடுத்துள்ளார். அவர் வருவதற்கு காலதாமதமான நிலையில் உரிய வாகனத்தின் சாரதி கல்லாறு பகுதியிலிருந்து மீண்டும் ஏறாவூர் பகுதி நோக்கித் திரும்பிச் செல்லும் வழியிலேயே அவர் தேர்தல் திணைக்கள அதிகாரிகளால் வழிமறிக்கப்பட்டு பொலிஸாரிடம் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

எனினும் தான் தனது வாகனத்தில் ஏற்றி வந்த அரிசி மூடைகளை யாருக்கு ஒப்படைக்க வேண்டுமெனத் தனக்குத் தெரியாதெனவும் கல்லாறு பகுதியிலிருந்து ஒருவர் வந்து பெற்றுக்கொள்வார் என அரிசி மூடைகளை ஏற்றிவிட்ட கடை உரிமையாளர் தெரிவித்ததாகவும் உரிய நபர் அங்கு வந்து அரிசி மூடைகளைப் பொறுப்பேற்காத நிலையில் தான் திரும்பிச் சென்ற நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் உரிய வாகனத்தின் சாரதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஒரு தொகுதி அரிசி மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிந்த பல அரசியற் கட்சிகளின் வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்துக்கு விரைந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டியிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

# காரைதீவு பிரதேச சபைக்கு 11 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 112 வேட்பாளர்கள் போட்டி

## வாக்களிப்பில் மக்கள் அசமந்தம்

*(மாளிகைக்காடு செய்தியாளர்)*



அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 உள்ளூராட்சி மன்றங்களில் கல்முனை மாநகர சபை தவிர்ந்த ஏனைய சபைகளுக்கான தேர்தல் நேற்று(06) பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெற்றது. ஆனால், வாக்களிப்பில் காலை நேரத்தில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதில் அசமந்த நிலைமையைக் காணக்கூடியதாக இருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள காரைதீவு பிரதேச சபை எல்லைக்குள் காரைதீவு, மாளிகைக்காடு மற்றும் மாவடிப்பள்ளி என மூன்று ஊர்கள் உள்ளன. இந்த காரைதீவு பிரதேச சபை ஏழு வட்டாரங்களைக் கொண்டது. இதில் நான்கு வட்டாரங்கள் காரைதீவு தமிழ் பிரதேசத்திலும் மிகுதி மூன்று வட்டாரங்கள் மாளிகைக்காடு (02) மாவடிப்பள்ளி (01) ஆகிய முஸ்லிம் பகுதிகளிலும் உள்ளன.

காரைதீவு பிரதேசத்தில் மொத்த சனத்தொகை 21,694. அவர்களில் மொத்தமாக 14,624 வாக்காளர்கள் உள்ளனர். அவற்றில் 8,659 தமிழ் வாக்காளர்களும் 5,965 முஸ்லிம் வாக்காளர்களும் உள்ளனர். இந்தப் பிரதேச சபையைக் கைப்பற்றும் கட்சி குறைந்தது 06 ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் தனித்து ஆட்சியமைக்க முடியும். இன்றேல் கூட்டாட்சி தான் சாத்தியம்.

இம்முறை ஏழு கட்சிகள் மற்றும் ஒரு சுயேச்சை குழு உள்ளிட்ட எட்டு அணிகள் போட்டியிடுகின்றன. இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் காரைதீவு பிரதேச சபைக்கு 11 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 112 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய 07 கட்சிகளும் முன்னாள் உப தவிசாளர் ஏ.எம்.ஜாஹீர் தலைமையிலான ஒரு சுயேச்சைக் குழுவும் (தையல் இயந்திரம்) போட்டியிட்டன. இச்சபையை கடந்த மூன்று தடவைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்தமை குறிப்பிடத்தக்கது.



*தோப்பூர், அல்லைநகர் மற்றும் பாலத்தோப்பூர் ஆகிய மூன்று வட்டாரங்களிலிருந்து மூன்று வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்காக மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் கலந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது. இதன்போது பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன் வாக்களிப்பு நிலையங்களுக்குள் கையடக்கத் தொலைபேசிகளை எடுத்துச் செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இத்தேர்தல் சுமுகமாக நடைபெற்றதையும் அவதானிக்க முடிந்தது. (தோப்பூர் செய்தியாளர்)*

# ஏறாவூர், வாழைச்சேனை பிரதேசங்களில் வேட்பாளர்கள் இருவர் உட்பட மூவர் கைது

*(கனகராசா சரவணன்)*

ஏறாவூர், வாழைச்சேனை பிரதேசங்களில் தேர்தல் நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்த ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சிகளைச் சேர்ந்த இரு வேட்பாளர்கள் உட்பட மூவரை நேற்று (06) கைதுசெய்துள்ளதாக அந்தந்த பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓட்டமாவடி அந்நூர் பாடசாலையில் வாக்களிப்பு நிலையத்துக்கருகில் ஒரு கட்சியின் வேட்பாளர் அவரது ஆதரவாளர் உட்பட இருவர் வாக்காளர்களை சுதந்திரமாக வாக்களிக்க விடாது இடையூறு விளைவித்ததையடுத்து அவர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

அதேவேளை, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மீராங்கேணி வாக்களிப்பு நிலையத்துக்கு சென்ற ஐ.தே.கட்சி வேட்பாளரொருவர் தமது கட்சிக்கு வாக்களிக்குமாறு கோரி வாக்களிப்புக்கு இடையூறு விளைவித்த அவரைக் கைதுசெய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்தந்த பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## 60 ஆண்டுகால வெற்றிப் பயணத்தில் லக்ஸ்பிறே




இலங்கையில் பால் உற்பத்தித்துறையின் அத்திவாரமாகத் திகழ்ந்து வந்துள்ள Lanka Milk Foods (CWE) PLC, மகத்துவத்தின் முன்னோடியாகவும் தரம் மற்றும் போஷாக்கு ஆகியவற்றில் புதிய தராதரங்களை நிலைநாட்டியவாறும் சிறப்பாகப் பயணித்துள்ளது. அதன் பிரதான வர்த்தகநாமமான லக்ஸ்பிறே, ஆறு தசாப்தங்களாக அனைத்து இல்லங்களிலும் உச்சரிக்கப்படுகின்ற நாமமாகத் திகழ்ந்து வந்துள்ளதுடன், நம்பிக்கை, ஊட்டச்சத்து மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றின் அடையாளமாகவும் காணப்படுகின்றது. தூய, உயர் தரம் கொண்ட பாலை வழங்கும் தனது வாக்குறுதியை எப்போதும் கட்டிக்காத்து வந்துள்ள ஒரு தயாரிப்பான லக்ஸ்பிறே வழங்கும் ஒப்பற்ற பாற்சுவையை இலங்கை மக்கள் தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வந்துள்ளனர்.

லக்ஸ்பிறே என்பதை வெறுமனே ஒரு வர்த்தகநாமம் என்ற வார்த்தையினுள் அடக்குவதுடன் மாத்திரம் நின்று விட முடியாது. அது போஷாக்கு மற்றும் நலனின் ஒரு புகழ்பூத்த பாரம்பரியத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. 100% தூய பசுப்பாலிலிருந்து பெறப்படுகின்ற முழு ஆடைப் பால்மா என்ற வகையில் நாம் அருந்துகின்ற ஒவ்வொரு கோப்பை பாலும் உண்மையானது மற்றும் ஆரோக்கியமானது என்பதை உறுதி செய்து, எவ்விதமான சேர்க்கைப் பொருட்களோ அல்லது பதப்படுத்துவதற்காக இடப்பட்டுள்ள பொருட்களோ கிடையாது. சிறந்த கரையும் திறன் மற்றும் கவர்ச்சியான தோற்ற அமைப்பு ஆகியன அதனை நேர்த்தியான தெரிவாக மாற்றியுள்ளதுடன், அத்தியாவசியமான புரதங்கள், விட்டமின்கள் மற்றும் கனியுப்புகள் ஆகியவற்றை வழங்கும் நம்பகமான மூலத்தை அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்குகின்றது. நுகர்வோரின் பல்வகைப்பட்ட தேவைகளையும் நிறைவேற்றுகின்ற லக்ஸ்பிறே, வெவ்வேறுபட்ட அளவுகள் கொண்ட பாக்கெட்டுக்களில் கிடைப்பதால் சமுதாயத்தில் அனைத்து மட்டங்களிலுள்ளவர்களும் பெற்றுக்கொள்ளக்கூடியதாகக் காணப்படுகின்றது.

## Nippon Paint தனது வருடாந்த 'சூரிய மங்களம்' கொண்டாட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பு





Nippon Paint Lanka, தமிழ், சிங்கள புத்தாண்டைத் தொடர்ந்து முதல் வேலை நாளை நீர்கொழும்பு Camelot Beachside ஹோட்டலில் பாரம்பரிய கொண்டாட்டங்கள் மற்றும் களிப்பூட்டும் நிகழ்வுடன் ஆரம்பித்தது.

Nippon Paint Singapore Group இன் முகாமைத்துவப் பணிப்பாளர் ஷெங் தொங்யின் கருத்துத் தெரிவிக்கையில், "முதல் தடவையாக இந்நிகழ்வில் பங்கேற்க முடிந்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக, Nippon Paint Lanka அணியினருடன் தமிழ், சிங்கள புத்தாண்டு பிறப்புக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையில் Nippon Paint தன்னைப் பெரிதும் அர்ப்பணித்துள்ளது. வியாபாரத்தை வளர்ச்சியடையச் செய்வதில் நாம் கவனஞ்செலுத்துவதுடன், பொருளாதாரத்துக்கு மீளளிப்பதிலும் சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் அக்கறை கொண்டுள்ளோம். இந்தச் சிறந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக எனக்கு அழைப்பு வழங்கப்பட்டிருந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்" - என்றார்.

Nippon Paint Lanka வணிகப் பணிப்பாளர்/பொது முகாமையாளர் நிமந்த அபேசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "நாம் சிறந்த முதல் காலாண்டைக் கடந்திருந்தோம். இன்று நாம் அதன் வெற்றியைக் கொண்டாடுகிறோம். பத்து நாட்களாக நாம் விடுமுறையிலிருந்தோம். அதனைத் தொடர்ந்து புதுவருடத்தில் முதல் நாள் வேலை ஆரம்பிக்கையில் அனைவரும் இணைந்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். இது போன்று பல வருடங்களாக நாம் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருகிறோம். Nippon Paint இன் மக்களுக்கு முன்னுரிமையளிக்கும் செயன்முறை என்பது, எப்போதும் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்துள்ளது. எமது ஊழியர்களை நாம் மதிப்பதுடன், அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியுடனும் வலுவூட்டப்பட்டவர்களாக இருப்பதையும் காண விரும்புகிறோம்" - என்றார்.

## ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸிடமிருந்து மியன்மாருக்கு மனிதநேய உதவி





ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சியின் துணை நிறுவனமாகத் திகழும் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ், அண்மையில் மியன்மாரில் ஏற்பட்ட 7.7 ரிச்டர் அளவிலான பூமி அதிர்வால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதநேய உதவியை வழங்க முன்வந்திருந்தது. அதன் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை நன்கொடையாக வழங்கியிருந்தது.

ஏப்ரல் 04 ஆம் திகதி இந்த நன்கொடை வழங்கலைப் பூர்த்தி செய்த ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ், மனிதநேய முயற்சிகளுக்கு உதவும் வகையில் இடர் முகாமைத்துவ நிலையத்துக்கு (DMC) பெருமளவு அத்தியாவசிய மருந்துப் பொருட்களைக் கையளித்திருந்தது. இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் கோரிக்கையின் பிரகாரம் இடர் முகாமைத்துவ நிலையத்தின் (DMC) முயற்சிகளுக்கு ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் ஆதரவளித்திருந்தது.

ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இடர் முகாமைத்துவ நிலையத்தின் (DMC) பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட (ஓய்வுபெற்ற) ndc IG குறிப்பிடுகையில், "இடர் நிலையின் போது, செயலாற்றுவதில் தனியார் துறை ஆற்றும் முக்கிய பங்களிப்பை இந்தச் செயற்பாடு வெளிப்படுத்தியுள்ளது. வளங்கள் மற்றும் நிபுணத்துவத்துடன் வியாபாரங்கள் உதவிகளை வழங்க முன்வரும் போது, அவசர மனிதநேய தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவுவது மாத்திரமன்றி, பிராந்திய உறுதித்தன்மை மற்றும் மீட்சியை வலிமைப்படுத்தவும் பங்காற்றும். பாதிக்கப்பட்ட சமூகங்களில் துரிதமான, வினைத்திறனான நிவாரணம் மற்றும் நீண்டகால மீட்சியை உறுதி செய்வதில் இது போன்ற பங்காண்மைகள் முக்கியமானதாக அமைந்துள்ளன" - என்றார்.







இலங்கையில் நீண்ட காலமாக இயங்கும் முன்னணி தனியார் ஆயுள் காப்புறுதி நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ், தனது புதிய ஊழியர் பெறுமதி அறுதியுரையை (EVP) 'வரையறைகளுக்கு அப்பால் வளர்ச்சியடைதல்' எனும் தொனிப்பொருளில் அறிமுகம் செய்துள்ளது. தமது ஊழியர் படையணியைத் தொடர்ச்சியாக மேம்படுத்தல் மற்றும் நிறுவனத்தினுள் முன்னோக்கிச் சிந்திக்கும் கலாசாரத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொழும்பு சினமன் கிரான்ட் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த அறிமுக நிகழ்வில், ஜோன் கீல்ஸ் குழுமத்தின் பிரதம மக்கள் அதிகாரி இசுரு குணசேகர, யூனியன் அஷ்யூரன்ஸ் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் அணி அங்கத்தவர்கள் அடங்கலாக பிரதான நபர்கள் பலர் கலந்துகொண்டனர்.



வெசாக் தினத்தை முன்னிட்டு, தேசிய தொலைத்தொடர்பாடல் சேவைகள் வழங்குநர் SLT-MOBITEL விசேட சுகாதார முகாமை 2025 மே மாதத்தின் முதல் வாரத்தில் கம்பஹா SLT-MOBITEL பிராந்திய அலுவலக வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இப்பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 550 க்கும் அதிகமானவர்களுக்கு அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்கியிருந்தது. 'சம்பந்தியாவே தஹமி சத்காரய' எனும் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சமூக, சூழல் மற்றும் ஆளுகை (ESG) அர்ப்பணிப்புகளின் பிரகாரம் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

## LECO உடன் ஒன்றிணையும் MegaPay இன் Pay&Go



MegaPay இன் Pay&Go தளம் ஏற்கனவே 1000 க்கும் மேற்பட்ட டிஜிட்டல் கியோஸ்க்குகள் மூலம் மற்றும் பரவலாக பாவனையிலுள்ள மொபைல் செயலி மூலம் நாடு முழுவதுமான கட்டணம் செலுத்தும் நடைமுறையை மாற்றியமைத்துள்ளது. பாவனையாளர் வசதியை கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இப் Pay&Go செயலி பொதுச் சேவைக் கட்டணங்கள் முதல் ரீலோட்கள் வரை பல்வேறு வகையான கட்டணங்களை ஒரு சில தட்டல்களில் செலுத்த வழியமைக்கின்றது.

இலங்கையின் டிஜிட்டல் கட்டணத்துக்கான தளத்தை மேம்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக நிதி தொழில்நுட்பத்தின் மூலம் எதிர்காலத்தை வடிவமைக்கும் மெகா பே அதன் முன்னணி தயாரிப்பான Pay&Go மற்றும் Lanka Electricity Company (LECO)) இடையே நேரடி ஒன்றிணைப்பை அறிவித்துள்ளது. இவ்வொன்றிணைப்பு Pay&Go செயலி மற்றும் கியோஸ்க் பாவனையாளர்களுக்கு தங்கள் மின்சாரக் கட்டண நிலுவைத் தொகையைப் பார்க்கவும் பணம் செலுத்தியவுடனே அதன் பிரதிபலிப்பை அவர்களின் கணக்கில் பார்க்கவும் வழியமைக்கின்றது. இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு ஒரு தடையற்ற, வெளிப்படையான அனுபவம் வழங்கப்படுகிறது.

இவ் டிஜிட்டல் மாற்றம் கட்டண செலுத்தல்களில் ஒரு புதிய மாற்றத்தை அறிமுகப்படுத்துகிறது.

## சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள் நிறுவன விருதுகள் 2024 இல் இடம்பிடித்தது பான் ஏசியா வங்கி



பான் ஏசியா வங்கியானது பட்டய தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவனம் (CPM) நடத்திய 2025 ஆம் ஆண்டுக்கான சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள் நிறுவன விருதுகளில் தனது விதிவிலக்கான செயற்றிறனை அறிவிப்பது தொடர்பாக பெருமிதம் கொள்கிறது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் வங்கியானது புத்தாக்கம், அதி சிறப்பாக செயற்படல் மற்றும் நெறிமுறை முகாமைத்துவம் ஆகியவற்றில் அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் மூன்று கௌரவமிக்க விருதுகளுடன் அங்கீகரிக்கப்பட்டது.

பான் ஏசியா வங்கியானது சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளைச் செயற்படுத்துவதில் அதன் சிறந்த தலைமைத்துவம் மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் விதமாக இருபது சிறந்த நிறுவனங்களில் ஒன்றாகப் பெயரிடப்பட்டது. மேலும் வங்கியானது டிஜிட்டல் எழுத்தறிவு தொகுதியில் வெள்ளி விருதையும் பெற்றதுடன் இது டிஜிட்டல் மாற்றம் மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட புத்தாக்கத்துக்கான அதன் முன்னோக்கு சிந்தனை அணுகுமுறைக்கு சான்றாகும். மேலும் வங்கியானது இவற்றைத் தவிர மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த வங்கி (தனியார் துறை) பிரிவில், தகுதிகாண் விருதைப் பெற்றதுடன் இது இலங்கையின் தனியார் வங்கித் துறையில் நம்பகமான மற்றும் செயற்றிறன் சார்ந்த நிதி நிறுவனமாக அதன் நிலையை மேலும் உறுதிப்படுத்தியது.

"CPM இன் இந்த அங்கீகாரத்தால் நாம் உண்மையிலேயே கௌரவிக்கப்படுகிறோம்" - என்று பான் ஏசியா வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நளீன் எதிரிசிங்க கூறினார். "இந்த விருதுகள் எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு நன்மைகளைக்கொண்ட புதுமையான மற்றும் பொறுப்பான வங்கித் தீர்வுகளை வழங்க எமது முழு குழுவினரும் மேற்கொண்ட கடின உழைப்பு, ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றன" - என்றார்.

## 32ஆவது கிறேஷியன் பரிசுக்கான இறுதிப்பட்டியல் அறிவிப்பு




ஜோன் கீல்ஸ் அறக்கட்டளையுடன் பெருமையுடனான கூட்டாண்மையுடன், இலங்கை எழுத்தாளர்களின் ஆங்கில படைப்பு எழுத்தின் சிறந்த படைப்புகளைக் கொண்டாடும் 32ஆவது கிறேஷியன் பரிசுக்கான தெரிவுப் பட்டியலை கிறேஷியன் அறக்கட்டளை மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. மிகவும் போட்டி நிறைந்த நீண்ட பட்டியலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, இறுதிப்பட்டியலிடப்பட்ட தலைப்புகள் சமகால இலங்கை இலக்கியத்தின் வலிமை மற்றும் பரிணாமத்தைப் பிரதிபலிக்கின்றன.

32ஆவது கிறேஷியன் பரிசுக்காக இறுதிப்பட்டியலிடப்பட்ட படைப்புகள் (அகர வரிசைப்படி): He Was Gods Child Too - உபாலி மஹாலியன, Kata Katha: Gossip, Rumours, and Idle Talk - சவின் எதிரிசிங்க, Nowhere No Return - அஜித் பெரகும் ஜெயசிங்க, The Warm South - விஹங்கா பெரேரா, Wombful of Weeds - ரனுதி குணவர்தன, இந்த ஆண்டின் புகழ்பெற்ற நடுவர் குழுவுக்கு புலிட்சர் பரிசு பெற்ற கவிஞர், கட்டுரையாளர் மற்றும் NYU அபுதாபியில் இலக்கியம் மற்றும் படைப்பு எழுத்துப் பேராசிரியரான பேராசிரியர் கிறெகரி பார்ட்லோ தலைமை தாங்கினார். அவருடன், சமூக விஞ்ஞானிகள் சங்கத்தின் ஆராய்ச்சியாளரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளருமான கலாநிதி கிறிஸ்டல் பெய்ன்ஸ் மற்றும் விருது பெற்ற பத்திரிகையாளர் மற்றும் வாழ்க்கை வரலாற்றாசிரியர் சாவித்ரி ரொட்ரிகோ ஆகியோர் இணைந்து கொண்டனர். இலக்கியச் சிறப்பு, அசல் தன்மை மற்றும் கருப்பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டும் ஒரு குறுகிய பட்டியலைத் தேர்ந்தெடுக்கும் மகத்தான பணியை இந்தக் குழு சிறப்பாக மேற்கொண்டது.

## BYD இன் மேம்பட்ட மின்கலம் - இன்வெர்ட்டர் தீர்வுகள் மூலம் இலங்கையை வலுவூட்டும் Hayleys Solar







இலங்கையின் முன்னணியிலுள்ள சூரியசக்தி வழங்குநரான Hayleys Solar, உலகளாவிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பாதுகாப்புத் துறையில் முன்னணி நிறுவனமாக விளங்கும் BYD உடன் இணைந்து இலங்கைச் சந்தையில் அதிநவீன வலுசக்தி சேமிப்பு மற்றும் இன்வெர்ட்டர் தீர்வுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இது நாட்டின் வலுசக்தி பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தில் ஒரு முக்கிய படியைக் குறிக்கிறது.

BYD Energy Systems உடனான இந்த ஒத்துழைப்பானது, LV 5.0, LV 5.0 Plus, Battery-Box Premium HVS, Battery-Max LiteIn, Solar Hybrid Inverters உள்ளிட்ட BYD இன் மிகவும் மேம்பட்ட வலுசக்தி தொழில்நுட்பங்களை இலங்கையில் வெளியிட வழிவகுத்துள்ளது. வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களை திறனாகவும் அளவிடக்கூடிய மற்றும் அறிவார்ந்த தீர்வுகளுடனும் அவற்றின் வலுசக்தி பயன்பாட்டை மேம்படுத்தவும் இந்தத் தொகுதிகள் உதவுகின்றன.



# போர் மூளும் அபாயம்!

## இந்தியா முழுவதும் இன்று 259 இடங்களில் போர் ஒத்திகை

### 24 மணி நேரத்தில் 2ஆவது முறையாகவும்

## பிரதமருடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் டோவல் முக்கிய ஆலோசனை

இந்திய - பாகிஸ்தானிடையே போர் பதற்றம் உச்சத்திலிருக்கும் நிலையில், 54 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியா முழுவதும் இன்று (07) போர் ஒத்திகை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், நேற்று 24 மணிநேரத்துக்குள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் டோவலுடன் பிரதமர் மோடி அவசர ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

டில்லியிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற ஆலோசனையில், பஹல்காம் தாக்குதல் சம்பவத்துக்குப் பிந்தைய தயார் நிலை பற்றியும் போர் பதற்ற சூழல் ஒத்திகை குறித்தும் விவாதிக்கப்பட்டதாகக் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் நேற்றுமுன்தினம் மாலையில் ஆலோசனை நடத்திய நிலையில், 24 மணி நேரத்தில் 2ஆவது தடவையாக ஆலோசனை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

**நாடு முழுவதும் 259 இடங்களில் ஒத்திகை**

இந்நிலையில், இந்தியா முழுவதும் இன்று (07) 259 இடங்களில் போர்க்கால ஒத்திகை நடைபெறவுள்ளது.

அந்தவகையில் டில்லி, மும்பை, சென்னை உட்பட 259 இடங்களில் போர்க்கால ஒத்திகை நடைபெறவுள்ளது. நாடு முழுவதும் போர்க்கால ஒத்திகை நடக்கும் இடங்களின் எண்ணிக்கை மாநில ரீதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஆந்திர பிரதேசம் (2 இடங்கள்), அருணாச்சல பிரதேசம் (5 இடங்கள்), அசாம் (20 இடங்கள்), பீஹார் (5 இடங்கள்), சண்டிகர் (ஓர் இடம்), சத்தீஸ்கர் (ஓர் இடம்), டில்லி (ஓர் இடம்), கோவா (2 இடங்கள்), குஜராத் (18 இடங்கள்), ஹரியானா (11 இடங்கள்), ஹிமாச்சல பிரதேசம் (ஓர் இடம்), ஜம்மு-காஷ்மீர் (19 இடங்கள்), ஜார்க்கண்ட் (6 இடங்கள்), கர்நாடகா (3 இடங்கள்), கேரளா (2 இடங்கள்), லட்சத்தீவு (ஓர் இடம்), மத்திய பிரதேசம் (5 இடங்கள்), மஹாராஷ்டிரா (16 இடங்கள்), மணிப்பூர் (5 இடங்கள்), மேகலாயா (3 இடங்கள்), மிசோரம் (ஓர் இடம்), நாகலாந்து (10 இடங்கள்), ஒடிசா (12 இடங்கள்), புதுச்சேரி (ஓர் இடம்), பஞ்சாப் (20 இடங்கள்), ராஜஸ்தான் (28 இடங்கள்), சிக்கிம் (ஓர் இடம்), திரிபுரா (ஓர் இடம்), உத்தர பிரதேசம் (19 இடங்கள்), உத்தரகண்ட் (ஓர் இடம்), மேற்குவங்கம் (31 இடங்கள்), அந்தமான் நிக்கோபர் (ஓர் இடம்)

**தமிழகத்தில்...!**

தமிழகத்தில் 4 இடங்களில் போர்க்கால ஒத்திகை நடக்கவுள்ளது. கல்பாக்கம், மீனம்பாக்கம், ஆவடி, மணலி ஆகிய 4 இடங்களை மத்திய அரசு தெரிவுசெய்துள்ளது.



இதற்கு முன்பு, 1971ஆம் ஆண்டு போர் ஒத்திகை பாதுகாப்பு நடந்தது. தற்போது 54 ஆண்டுகள் கழித்து போர் பாதுகாப்பு ஒத்திகை நடைபெறவுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

**1971இற்குப் பின்னர்...**

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த 22ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். இதன் காரணமாக இந்தியா, பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலில் நாடு முழுவதும் இன்று போர்க்கால பாதுகாப்பு ஒத்திகைகளை நடத்துமாறு அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய உள்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

1971ஆம் ஆண்டில் இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் நடைபெற்றது. அப்போது நாடு முழுவதும் போர்க்கால ஒத்திகைகள் நடத்தப்பட்டன. அதன்பின், அத்தகைய ஒத்திகைகள் நடைபெறப்போவது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஒத்திகை எப்படி நடக்கும்?**

போர்க்காலங்களின்போது இந்திய எல்லைப் பகுதிகளில் அந்நிய போர் விமானங்கள் நுழைந்தால் சைரன் ஒலி எழுப்பப்படுவது வழக்கம். இந்நிலையில், இன்று நடைபெறவுள்ள ஒத்திகையின்போது இதுபோல சைரன் ஒலி எழுப்பப்படும். பாதுகாப்பான இடங்கள் குறித்து பொதுமக்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்படும். சைரன் ஒலியின்போது அந்த இடங்களுக்கு மக்கள் பாதுகாப்பாகச் செல்வது குறித்த அறிவுரைகள் வழங்கப்படவுள்ளன.

போர்க்காலங்களில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து தன்னார்வலர்கள் மற்றும் மாணவ, மாணவியருக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. குறிப்பாக, போரில் காயமடைந்தவர்களை மீட்பது, எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து பொதுமக்களை பத்திரமாக பாதுகாப்பது குறித்து அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இரவில் மின்சாரத்தை துண்டித்து வெளியே தெரியாத வகையில் அகல்விளக்கு ஒளியில் அன்றாட பணிகளை மேற்கொள்வது குறித்து மக்களுக்குப் பயிற்சியளிக்கப்படவுள்ளது. குறிப்பாக, அணு மின் நிலையங்கள் உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் வசிப்போர் போர்க்காலங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பது குறித்து சிறப்புப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. எதிரிகள் தாக்குதல் நடத்தும் பகுதிகளிலிருந்து பாதுகாப்பாக வெளியேறுவது, பதுங்கு குழிகள் மற்றும் சுரங்கப் பாதைகளில் பாதுகாப்பாக தங்கியிருப்பது குறித்து மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

ஜம்மு - காஷ்மீரின் எல்லையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதாள பதுங்கு அறைகளை ஏற்கனவே தயார் செய்து வைத்துள்ளனர். ஒரு மாதத்துக்குத் தேவையான மளிகைப் பொருட்களையும் வாங்கி வைத்திருக்கின்றனர். இதேபோல பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களின் எல்லையோரக் கிராமங்களிலும் போர்க்கால ஒத்திகை தொடங்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்பின் பெரோஸ்பூர் பகுதியை ஒட்டிய கிராமங்களில் ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணி முதல் 9.30 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. அந்த நேரத்தில் இன்வெர்ட்டர், ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி வீடுகளில் மின் விளக்குகளை ஒளிரச் செய்யக் கூடாது. வாகனங்களின் முகப்பு விளக்குகளைகூட ஒளிரச் செய்யக் கூடாது என்று பொலிஸார் அறிவுறுத்தினர். இதை எல்லையோரக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மிகுந்த கண்டிப்புடன் பின்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பதற்றத்துக்கிடையே அவசரமாகக் கூடிய ஐ.நா. பாதுகாப்புச் சபை**

காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா எடுத்துவரும் அதிரடி நடவடிக்கைகளால் கலக்கமடைந்த



பாடசாலை மாணவர்களுக்கான போர் ஒத்திகை பயிற்சியின்போது....

பாகிஸ்தான், இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்க ஐக்கிய நாடுகள் சபையில் பாதுகாப்புச் சபை கூட்டத்தைக் கூட்டுமாறு கோரியது. பொதுவான ஆலோசனையாக இன்றி சம்பந்தப்பட்ட தரப்புகள் மட்டுமே பங்கேற்கக்கூடிய மூடிய அறைக் கூட்டமாக இது நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை. இதனால், பாகிஸ்தானுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

இதற்கிடையே, இக்கூட்டம் தொடங்குவதற்கு முன்பு ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பதற்றம் நீண்டகாலமாகவுள்ளது. அதேநேரம் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் கண்டனத்துக்குரியது. அதில் பலியானவர்களுக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த காரணத்துக்காகவும் பொது மக்களின் மீதான பயங்கரவாதத் தாக்குதலை ஏற்றுக்கொள்ள முடியாது. சமீபத்திய பிரச்சினையால் இருநாடுகளுக்குமிடையே பதற்றம் அதிகரித்து வருவது வேதனையளிக்கிறது. பிரச்சினைகளுக்கு இராணுவம் மூலம் தீர்வு ஏற்படாது. எனவே, இரு நாடுகளும் அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பதற்றத்தைத் தணிக்க முன்வர வேண்டும். எந்தத் தவறும் செய்யாதீர்கள். இராணுவத் தீர்வு ஒரு தீர்வாகாது.'' -இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**இந்தியாவின் பக்கம் நிற்கிறோம் - அமெரிக்கா**

பஹல்காமில் தாக்குதலைக் கண்டித்திருந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்,

''பயங்கரவாதத்துக்கு எதிராக இந்திய மக்களுடன் அமெரிக்கா உறுதியாக நிற்கிறது. பிரதமர் மோடி மற்றும் இந்திய மக்களுக்கு எங்களின் முழு ஆதரவும் அனுதாபங்களும் உள்ளன'' என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், "இரு நாடுகளுக்கும் இடையிலான சூழலை அமெரிக்கா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாட்டு அரசுடன் நாங்கள் தொடர்பில் இருக்கிறோம். இந்தியா - பாகிஸ்தான் இடையே உரிய தீர்வு காண அமெரிக்கா ஊக்குவிக்கிறது. அதேநேரத்தில் பஹல்காமில் நடந்த தீவிரவாதத் தாக்குதலை அமெரிக்கா வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த விடயத்தில் நாங்கள் இந்தியாவின் பக்கம் நிற்கிறோம்" - என அமெரிக்க அரசு துறையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

**இந்தியாவுக்கு ரஷ்யா - ஜப்பான் ஆதரவு**

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியாவுக்கு ரஷ்யா முழு ஆதரவு அளிக்குமென்று பிரதமர் நரேந்திர மோடியிடம் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வாக்குறுதியளித்துள்ளார்.

கடந்த 22ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காமில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலுக்கு ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அன்றைய தினமே கடும் கண்டனம் தெரிவித்தார். அப்போது, "பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். இத்தாக்குதலை நடத்திய தீவிரவாதிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்தியாவுக்கு ரஷ்யா எப்போதும் பக்கபலமாக இருக்கும்" - எனத் தெரிவித்தார்.

**இந்தியா வரும் புட்டின்**

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி மாளிகை நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

''நடப்பாண்டில் இந்தியா, ரஷ்யா உச்சிமாநாடு நடத்தப்படவுள்ளது. இந்தியாவில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பங்கேற்க ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை ஜனாதிபதி புட்டின் ஏற்றுக்கொண்டுள்ளார்''

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷ்ய ஜனாதிபதி புட்டினை கைதுசெய்ய சர்வதேச நீதிமன்றம் கடந்த 2023ஆம் ஆண்டு உத்தரவிட்டது. இதன் காரணமாக வெளிநாடுகளுக்குச் செல்வதை அவர் தவிர்த்து வருகிறார். எனினும், நெருங்கிய நட்பு நாடான இந்தியா வருவதற்கு அவர் ஒப்புக்கொண்டுள்ளார். கடந்த 2021ஆம் ஆண்டில் ஜனாதிபதி புட்டின் டில்லிக்கு வருகை தந்தார். அப்போது 28 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இம் முறை அவர் இந்தியாவுக்கு வரும்போது பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்தியாவுக்கு ஜப்பான் ஆதரவு**

இந்நிலையில், இந்திய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை ஜப்பான் பாதுகாப்புத் துறை அமைச்சர் நகாடானி டில்லியில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியபோது, "இந்தியாவும் ஜப்பானும் மிக நெருங்கிய நட்பு நாடுகள். சர்வதேச, பிராந்திய விவகாரங்களில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்றி வருகின்றன. பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலை ஜப்பான் மிக வன்மையாக கண்டிக்கிறது. தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் போருக்கு ஜப்பான் முழு ஆதரவு அளிக்கும்" என்று தெரிவித்தார்.

## பஹல்காம் தாக்குதல் நடக்கப்போவது மத்திய அரசுக்கு முன்னரே தெரியும்

### மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு

''காஷ்மீர் - பஹல்காம் தாக்குதல் நடக்கப்போவது ஒன்றிய அரசுக்கு முன்னரே தெரியும்'' - என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ராஞ்சியில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய காங்கிரஸ் தலைவர், ''தீவிரவாதத் தாக்குதல் நடத்தப்போவது மத்திய அரசுக்கு முன்பே தெரியும். குறிப்பாக, 3 நாட்களுக்கு முன்னரே புலனாய்வு அமைப்பு பிரதமர் மோடிக்கு தாக்குதல் தொடர்பான தகவலைக் கொடுத்துள்ளது. தாக்குதல் எச்சரிக்கை பற்றி முன்பே அறிந்ததால் பிரதமர் காஷ்மீர் பயணத்தை இரத்துச்செய்தார்'' என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவரது உயிருக்குக் கொடுக்கும் மதிப்பை சுற்றுலாப் பயணிகளின் உயிருக்கு ஏன் கொடுக்கவில்லை? ஏன் பாதுகாப்பை காஷ்மீரில் பலப்படுத்தவில்லை? காஷ்மீரில் துணை இராணுவப் படையினர், எல்லை பாதுகாப்புப் படையினர், இராணுவம் உள்ளது. இருந்தபோதிலும் ஏன் அவர்களுக்கு தெரியப்படுத்தவில்லை என்ற



கேள்வியெழுப்பியுள்ளார். காங்கிரஸ் கட்சி எப்போதும் தீவிரவாதத்துக்கு எதிராக உள்ளது. அரசு எடுக்கும் எந்த நடவடிக்கையாக இருந்தாலும் தீவிரவாதத்துக்கு எதிராக நாங்கள் துணை நிற்போம். தாக்குதல் நடந்த பிறகும் அனைத்து கட்சி கூட்டம் கூட்டியபோது அரசு எடுக்கும் முடிவுக்கு துணை நிற்போமென தெரிவித்திருந்தோம். ஆனால், இந்தத் தாக்குதல் விவகாரம் தொடர்பாக புலனாய்வுத் துறை தகவல் கொடுத்த பின்னரும் பிரதமர் அலட்சியமாக இருந்துள்ளார்'' - என அவர் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.

# நுவரெலியா மாவட்டத்தில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பு




(எஸ்.கணேசன், செ.திவாகரன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு நுவரெலியா மாவட்டத்தில் 12 சபைகளுக்குமான 300 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான வாக்களிப்பு நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகியது.

பெருந்தோட்ட மக்கள் உட்பட அனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று ஆர்வத்துடன் வாக்குகளைப் பதிவுசெய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் 6,10,117 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர். இவர்களுள் 18,342 பேர் தபால் மூல வாக்காளர்களாவர்.

இந்நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் 540 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வாக்கெடுப்பு இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைக்காக 6,352 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

போக்குவரத்துக்காக அரச மற்றும் தனியார் வாகனங்கள் அடங்கலாக 672 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

அதேபோல், மத்திய மாகாணத்தில் கண்டி, மாத்தளை போன்ற பகுதிகளிலும் ஊவா மாகாணத்தில் பதுளை, பண்டாரவளை ஆகிய பகுதிகளிலும் வாக்களிப்பு மிகவும் நீதியாகவும் சுதந்திரமானதாகவும் நடைபெற்றதாகத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்தன.



மலையக மக்கள் முன்னணித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான வே.இரதாகிருஷ்ணன் நுவரெலியாவில் உள்ள நல்லாயினபற்று மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் நேற்று தனது வாக்கை பதிவுசெய்தார். (எஸ்.கணேசன்)



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் விசேட வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் கொத்மலை வேவண்டன் தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் தனது வாக்கை நேற்று பதிவுசெய்தார். (எஸ்.கணேசன்)



தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீர ஆரச்சி கினிகத்தேனை, களுகல மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் வாக்கை நேற்று பதிவு செய்தார். (எஸ்.கணேசன்)



தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி ஹட்டனில் உள்ள ஸ்ரீபாத சிங்கள வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் வாக்கை நேற்று பதிவு செய்தார். (எஸ்.கணேசன்)



தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் உயர் கல்விப் பிரதி அமைச்சருமான மதுர செனவிரத்ன நுவரெலியா ஸ்ரீ பியதிஸ்ஸ வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் நேற்று வாக்களித்தார்.

### எதிர்வரும் வெசாக் தினத்தை முன்னிட்டு

# தானசாலைகளை சுகாதார முறையில் அமைக்குக

### மாத்தளை சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

எதிர்வரும் வெசாக் தினத்தை (12 ,13) முன்னிட்டு தானசாலைகள் பல இடங்களிலும் அமைக்கப்படவுள்ள நிலையில், அவற்றைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் 9ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படுமென மாத்தளை சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள சீரற்ற காலநிலையால் டெங்கு உட்பட வைரஸ் தொற்றுகள் காணப்படுவதால் தானசாலைகள் விடயத்தில் கள ஆய்வுகளை மேற்கொள்வதாக சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளதுடன் ஆரோக்கியமான தானசாலைகளாக அமையவேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தானசாலைகளை நடத்துபவர்கள் அதனை நடத்துமிடங்கள் அங்கு பெறக்கூடிய குடிநீர் வசதிகள், உணவுகள், உணவுகள் தயாரித்தலும் பரிமாறலும் அவற்றை மேற்கொள்வோரின்



ஆரோக்கிய நிலைமைகள் கவனத்தில் கொள்ளப்படுமெனவும் தானசாலைகளை ஆரம்பிக்க விரும்புவோர் அதுகுறித்து பிரதேச சுகாதார வைத்திய காரியாலயத்துடன் தொடர்புகொண்டு அதன் ஆலோசனை வழிகாட்டலின்படி பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சங்கம் மேலும் கேட்டுக்கொண்டுள்ளது.

### தேர்தல் கடமைக்காகச் சென்ற

# அதிகாரி உயிரிழப்பு

(எம்.ஏ.அமீனுல்லா )

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகளுக்காக கண்டி கன்னொருவ கனிஷ்ட வித்தியாலயத்திலுள்ள வாக்குச் சாவடியில் தேர்தல் கடமைக்காகச் சென்ற கன்னொருவ தாவர மரபணு வள மையத்தின் அபிவிருத்தி அதிகாரியொருவர் திடீர் சுகயீனம் காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கலகெதர ,மினிகமுவவைச் சேர்ந்த கிருஷாந்தி குமாரி தசநாயக்க (வயது33) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (05) உள்ளூராட்சித் தேர்தல் கடமைக்காக வந்தவர் திடீர் சுகயீனம் ஏற்பட்டதன் காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பிரேத பரிசோதனைக்குப் பின்னரே மரணத்துக்கான காரணத்தை உறுதியாகக் கூறமுடியுமென்று பொலிஸார் தெரிவித்தனர்.

# அசாதாரண காலநிலையால் யாழில் 26 பேர் பாதிப்பு




(யாழ். நிருபர்)

அசாதாரண காலநிலையால் யாழ்ப்பாணத்தில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவுப் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/203 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் மின்னல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. ஜே/191 கிராம சேவகர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் பலத்த காற்றால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/141 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் பலத்த காற்றால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன், ஜே/150 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பலத்த காற்றால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும், சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/180 கிராம சேவகர் பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலத்த காற்றால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீடொன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது'' – என்றார்.

# அச்சுவேலி சீர்திருத்தப் பாடசாலையிலிருந்து தப்பிய மாணவன் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(வவுனியா நிருபர்)

யாழ்., அச்சுவேலிப் பகுதியிலுள்ள சீர்திருத்தப் பாடசாலையிலிருந்து தப்பிச் சென்ற 17 வயது மாணவன் நேற்று முன்தினம் (05) இரவு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த மாணவன் வவுனியாவிலுள்ள தனது நண்பரொருவரோடு தொடர்புகொண்டு வவுனியாவுக்குச் சென்றுள்ளார். ஆனால், வவுனியாவுக்குச் சென்ற பின்னர் அவரது நண்பன் தொடர்புகொள்ளவில்லை.

இந்நிலையில், வவுனியா பழைய பஸ் நிலையத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியபோது, வவுனியா ஊடகவியலாளர்கள் இருவருக்கு இது தொடர்பில் அப்பகுதியிலிருந்தவர்கள் தெரியப்படுத்தியிருந்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற ஊடகவியலாளர்கள் குறித்த மாணவனுடன் மேற்கொண்ட உரையாடல்களின்போது மாணவன் அச்சுவேலி பகுதியிலுள்ள சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையிலிருந்து தப்பிச் சென்றமை தெரியவந்தது.

இதனையடுத்து, அச்சுவேலி பொலிஸார் ஊடாக இரு மாணவர்கள் தப்பிச் சென்றதை உறுதிப்படுத்திய ஊடகவியலாளர்கள், வவுனியாவுக்குத் தப்பிச் சென்ற மாணவனை வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

# வவுனியாவில் அமைதியாக இடம்பெற்ற வாக்களிப்பு





(சி.திவியா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு நேற்று (06) காலை ஆரம்பமாகிய நிலையில் அமைதியான முறையில் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றதுடன், மக்கள் ஆர்வத்துடன் சென்று வாக்களித்ததையும் அவதானிக்க முடிந்தது.

வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய 5 சபைகளுக்கும் 103 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 1,731 பேர் போட்டியிட்டனர்.

ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 293 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்த நிலையில், 154 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு பணிகள் பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்றன.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்காக கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் வாக்கைப் பதிவுசெய்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் வவுனியா மாநகர சபைக்காக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தமது வாக்கைப் பதிவுசெய்தார்.

# மன்னாரில் சுமுகமாக இடம்பெற்ற வாக்களிப்பு





(மன்னார் நகர் நிருபர் )

மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் நேற்று செவ்வாய்க்கிழமை (06) காலைமுதல் சுமுகமான முறையில் இடம்பெற்றன.

மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் வாக்குப்பதிவுகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்டத்தில் 91 ஆயிரத்து 373 வாக்காளர்கள் இம்முறை வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். 5 உள்ளூராட்சி மன்றங்களிலிருந்தும் 88 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

மன்னார் நகர சபையில் 18 உறுப்பினர்களும் மன்னார் பிரதேச சபையில் 23 உறுப்பினர்களும் நானாட்டான் பிரதேச சபையில் 19 உறுப்பினர்களும் முசலி பிரதேச சபையில் 19 உறுப்பினர்களும் மாந்தை மேற்கு பிரதேச சபையில் 24 உறுப்பினர்களும் உள்ளடங்கலாக கட்சி மற்றும் சுயேச்சைக் குழு சார்பாக 103 உறுப்பினர்கள் போட்டியிட்டனர்.

அவர்களில் மன்னார் நகரசபைக்கு 15 உறுப்பினர்களும் மன்னார் பிரதேச சபைக்கு 20 உறுப்பினர்களும் நானாட்டான் பிரதேச சபைக்கு 16 உறுப்பினர்களும் முசலி பிரதேச சபைக்கு 16 உறுப்பினர்களும் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 21 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# மூன்றாவது அணியாக வெளியேறியது சன்ரைசர்ஸ்



மழையின் குறுக்கீடு காரணமாக டெல்லி கெபிடல்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் இடையிலான போட்டி கைவிடப்பட்டதன் காரணமாக சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி நடப்பு ஐ.பி.எல். தொடரில் மூன்றாவது அணியாக ப்ளேஓப் வாய்ப்பை இழந்தது.

முக்கியமான ஆட்டங்களில் ஒன்றான டெல்லி கெபிடல்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் போதிய போட்டி ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் அணி, முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

இதையடுத்து முதலில் களமிறங்கிய டெல்லி கெபிடல்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 133 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டெல்லி அணியின் இன்னிங்ஸ் முடிந்தவுடன் திடீரென மழை பெய்யத் தொடங்கியது.

மழை தீவிரமடைந்ததால் ஆட்டம் தொடர்ந்து தாமதமானது. நீண்ட நேரம் மழை விடாமல் பெய்த காரணத்தினால், போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

இந்த முடிவு சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது. ஏற்கனவே புள்ளிப்பட்டியலில் பின் தங்கியிருந்த ஹைதராபாத் அணிக்கு, இந்த ஒரு புள்ளி ப்ளேஓப் சுற்றுக்கு முன்னேற போதுமானதாக இல்லை. இதன் மூலம், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் ஐ.பி.எல் பயணம் முடிவுக்கு வந்தது.



# இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு களத்தடுப்பு பயிற்சி வழங்கும் ஸ்ரீதர்

இலங்கை கிரிக்கெட் வீரர்களின் களத்தடுப்பு தரத்தை உயர்த்தும் நோக்கில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் களத்தடுப்பு பயிற்சியாளர் ஆர். ஸ்ரீதர் 10 நாட்கள் களத்தடுப்பு பயிற்சி திட்டத்தை இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கவுள்ளார். இன்று முதல் எதிர்வரும் 10 நாட்களுக்கு இந்த பயிற்சி திட்டம் நடைபெறவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த சிறப்பு பயிற்சி திட்டத்தில் ஆடவர் மற்றும் மகளிர் தேசிய அணிகள், வளர்ந்து வரும் அணிகள், முதற்தர கழக வீரர்கள், தேசிய இளையோர் அணி மற்றும் மகளிர் ஏ அணி வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் (பி.சி.சி.ஐ) மூன்றாம் தர தகுதி பயிற்சியாளரான ஸ்ரீதர், 2014 முதல் 2021 வரை 300க்கும் மேற்பட்ட சர்வதேச போட்டிகளில் இந்தியாவின் களத்தடுப்பு பயிற்சியாளராக பணியாற்றிய அனுபவத்தை கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரோட்டரி வழங்கும் 20வது டி.ஆர்.ஆர். ராஜன் கிரிக்கெட் தொடர்



உலகிலேயே முதல் நெட்வொர்க்கிங் மற்றும் சேவை அமைப்பான ரோட்டரி, இலங்கையின் ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்டரக்டர்களுக்காக மட்டுமே நடத்தப்படும் ஆறுபேர் கொண்ட கிரிக்கெட் போட்டியின் 20வது தொடரை எதிர்வரும் சனிக்கிழமை கண்டி, நிட்டவெல ரக்பி மைதானத்தில் நடத்தவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைத்தீவு ரோட்டரி ஆளுநர் சுஷேனா ரணதுங்க தலைமைதாங்குவார்.

இந்த போட்டி கண்டி ரோட்டரி கிளப் மூலம் ஏற்பாடு செய்யப்படுவதுடன், ஸூர்யா பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் புகழ்பெற்ற சன் மேட்ச் நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. இந்த நிகழ்வு நிறுவுநர், தொழில் முனைவோரும், தொழில் நபருமான மறைந்த டி.ஆர்.ஆர். ராஜனுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

மறைந்த டி.ஆர்.ஆர். ராஜன், கண்டி ரோட்டரி கிளப்பின் 51வது தலைவர் ஆவார். டி.ஆர்.ஆர். என பிரபலமாக அறியப்படும் இவர் ஒரு பன்முக திறமைமிக்க விளையாட்டு வீரர், விளையாட்டு ஆதரவாளர், தானதரிசி மற்றும் உயரிய பண்பாட்டின் மனிதர் ஆவார். 1992ஆம் ஆண்டு, விளம்பர ஆதரவுக்கு முதன்முதலில் களத்தில் இறங்கியவர் இவரே. கண்டி விளையாட்டு கிளப் ரக்பி அணிக்கு அவர் ஆதரவளித்ததில், அவர்கள் கிளிஃபோர்டு கிண்ணத்தை வென்றனர்.

பின்னர், அவர் ஓல்ட் ட்ரினிடியன்ஸ் விளையாட்டு கிளப் ரக்பி அணிக்கும் ஆதரவளித்தார். அவரது தந்தையான பி.டி. ராஜன் கண்டியில் ஹொக்கியை மீண்டும் அறிமுகப்படுத்தியவராகவும் விளங்குகிறார். தற்போது அவர்களின் நல்ல முயற்சிகளை அவரது சகோதரரான பி.டி.ஆர். ராஜன் (நண்பர்கள் சூரி என்று அழைப்பர்). கடந்த கால ரோட்டரி ஆளுநர், தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறார்.

தற்போதைய கண்டி ரோட்டரி கிளப்பின் தலைவர் டாக்டர் அவந்தி கருணாரத்ன கூறியதாவது: இந்த நிகழ்வு 1000க்கும் மேற்பட்ட ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்டரக்டர்களை இணைத்து நட்பு மற்றும் ஆரோக்கியமான போட்டியை உருவாக்கும். வணிகத்தின் முடிவில் எல்லாமே உறவுகள் என்பதைத்தான் இது நம்மிடம் நினைவூட்டுகிறது என்று அவர் கூறினார்.

# விளையாட்டுத் துளிகள்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவராக செயற்பட்டுவந்த நஸ்முல் ஹூஸைன் ஷாண்டோ அந்த பதவியில் இருந்து விலகினார். இதையடுத்து தற்போது பங்களாதேஷ் ரி 20 கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் லிட்டன் தாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 2026 ரி 20 உலகக்கிண்ண அணியின் தலைவராக செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★

டெல்லியுடனான ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் அணித் தலைவர் பெட் கம்மின்ஸ் 3 விக்கெட் வீழ்த்தியதன் மூலம் ஐ.பி.எல். தொடரில் பவர் பிளேவுக்குள் 3 விக்கெட்டுகள் வீழ்த்திய முதல் அணித்தலைவர் என்கிற சாதனையை படைத்தார். கருண் நாயர், டு பிளெஸ்சிஸ், அபிஷேக் பொரெல் ஆகியோரின் விக்கெட்டுகளை கம்மின்ஸ் வீழ்த்தினார்.

★★★★★★★★★★★★★

சென்னை அணியின் இளம் வீரர் வான்ஷ் பேடி உபாதை காரணமாக நடப்பு ஐபிஎல் தொடரில் எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளார். வான்ஷ் பேடிக்கு பதிலாக இந்திய வீரர் உர்வில் படேலை சென்னை சுப்பர் கிங்ஸ் ஒப்பந்தம் செய்துள்ளது.

★★★★★★★★★★★★★

பார்முலா 1 கார் பந்தயத்தின் 6ஆவது சுற்றான மியாமி கிராண்ட் ப்ரீயில் அவுஸ்திரேலிய வீரரான மெக்லாரென் அணியின் ஒஸ்கார் பியாஸ்ட்ரி வெற்றி பெற்றார். மொத்தம் 57 வளைவு கொண்ட இந்தப் பந்தய தூரத்தில் பியாஸ்ட்ரி முதலிடம் பிடிக்க, பிரிட்டன் வீரரும் மெக்லாரென் அணியின் மற்றொரு வீரரான லாண்டோ நோரிஸ் 2-ஆம் இடம்பிடித்தார். பிரிட்டனை சேர்ந்த ஜோர்ஜ் ரஸ்ஸெல் 3-ஆம் இடம்பிடித்தார். தொடரின் 7வது சுற்றான எமிலியா ரொமாக்னா கிராண்ட் பிரிக்ஸ் எதிர்வரும் 18ஆம் திகதி இத்தாலியில் நடைபெறுகிறது.

# பீட்டர் ஏ. பிள்ளை ஞாபகார்த்த கிண்ணத்தை தக்கவைத்த புனித பீட்டர்ஸ் கல்லூரி



இலங்கையின் முதல்தர இணைப்பு வழங்குநரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி அனுசரணையில் நடைபெற்ற 51வது வருடாந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் புனித பீட்டர்ஸ் கல்லூரி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் புனித ஜோசப் கல்லூரியை வென்றது.

இந்த வெற்றியின் மூலம் புனித பீட்டர்ஸ் அணி பீட்டர் ஏ. பிள்ளை ஞாபகார்த்த கிண்ணத்தை தக்கவைத்துக் கொண்டது. இந்தத் தொடரில் பீட்டர்ஸின் 23வது வெற்றி இதுவாகும். செயின்ட் ஜோசப் அணி 25 வெற்றிகளைப் பெற்றுள்ளது.

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜோசப் கல்லூரி, 49வது ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 177 ரன்களை எடுத்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பீட்டர்ஸ் கல்லூரி 45.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 180 ரன்கள் எடுத்து இலக்கை எட்டியது.

# ரபாடாவின் தடை நீக்கம்



போதைப்பொருள் பயன்படுத்திய குற்றச்சாட்டில் தடைக்குள்ளான தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளரான ககிசோ ரபாடாவின் தடை முடிவுக்குவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஐ.பி.எல். தொடரில் குஜராத் டைட்டன்ஸ் அணியில் இடம்பெற்று முதல் இரண்டு போட்டிகளில் விளையாடிய ககிசோ ரபாடா, அதன் பின் தனிப்பட்ட காரணங்களுக்காக ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகுவதாகக் கூறி தாயகம் திரும்பினார். கடந்த ஜனவரி - பெப்ரவரி மாதம் தென்னாரிக்காவில் நடந்த எஸ்.ஏ.20 லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் கேப்டவுன் அணிக்காக ரபாடா விளையாடினார். இத்தொடரின் போதே இவர் ஊக்கமருந்தை பயன்படுத்தி இருக்கலாம். இருப்பினும் இவருக்கு எப்போது சோதனை நடத்தப்பட்டது, எவ்வளவு காலம் தடை என்பது தெரியவில்லை.

இந்நிலையில் தென்னாபிரிக்க ஊக்கமருந்து எதிர்ப்பு விதிகளின்படி ரபாடா போதைப்பொருள் தடுப்பு கல்வி மற்றும் விழிப்புணர்வு திட்டத்தில் பங்கேற்றார். இதில் 2 அமர்வுகளை ரபாடா நிறைவு செய்ததை தொடர்ந்து அவர் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே ரபாடா கடந்த குஜராத் டைட்டன்ஸ் அணியுடன் இணைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தடை நீக்கப்பட்டுள்ளதால் ரபாடா உடனடியாக ஐ.பி.எல். தொடரில் விளையாட முடியும். மேலும் அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் ரபாடா கலந்துகொள்வதில் எந்தவித சிக்கலும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## PSL - 2025

### இன்றைய போட்டி

போட்டி இல. - 26

**இஸ்லாமாபாத் VS குவெட்டா**

ராவல்பிண்டி - இரவு 8.30 மணி

### முடிவு

போட்டி இல. - 23

*முல்தான் - 108/10 (19.1)*

*பெஷாவர் - 110/3 (13)*

*பெஷாவர் 7 விக்கெட்களினால் வெற்றி*

## IPL - 2025

### இன்றைய போட்டி

போட்டி இல. - 57

**கொல்கத்தா VS சென்னை**

கொல்கத்தா - இரவு 7.30 மணி

### முடிவு

போட்டி இல. - 55

*டெல்லி - 133/7 (20)*

*சன்ரைசர்ஸ் - 0/0 (0)*

*போட்டி மழையால் கைவிடப்பட்டது.*

# கல்முனை வலய எல்லே சம்பியனாக நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை தெரிவு

*(எம்.எஸ்.எம்.ஸாகிர்)*



காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கல்முனை வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே போட்டியில் 20 வயது ஆண்கள் பிரிவில் நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை அணி இவ்வருடத்துக்கான சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டது.

வெற்றிபெற்ற வீரர்களுக்கு இவ்வெற்றிக்காக ஆலோசனை வழிகாட்டலை வழங்கிய கல்லூரி அதிபர் ஏ. அப்துல் கபூர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்ததோடு, அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கிய பாடசாலை கிரிக்கெட் பொறுப்பாசிரியர் எம்.எஸ்.எம்.சாபீர், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஐ.எம்.எஸ். இன்பாத் மௌலானா ஆகியோருக்கும் ஏனைய உடற்கல்வி ஆசிரியர்களான ரீ.எம்.தன்ஸீப், எம்.ஏ.எம். ஹிஜாஸ் அன்வர், எம்.எம்.எம். ஹாஸிக், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் எம்.ஐ. முஹம்மட் அஸ்மி, இணைப்பாடவிதானத்துக்கு பொறுப்பான உதவி அதிபர் எம்.எம்.எம். உவைஸ், ஏனைய பிரதி உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மற்றும் வீரர்களின் பெற்றோர்கள் ஆகியோருக்கும் அஷ்றக்கியன் சமூகம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தற்போது விற்பனையில்...
மாணவர்களின் கல்வி வழிகாட்டியான
ஜூனியர் தமிழன்
மே மாத சஞ்சிகைகள்
பாடசாலை பாடத்திட்டத்தின்படி,
தவணைகளின் அடிப்படையில்,
தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டு
வெளிவருகின்றன.




மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo −07